
செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை



சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௮ (ஆனி. July '77) [பரல்- ௧௧

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

"செந்தமிழ்ச் செல்வி"

உறுப்பினர் கட்டணம்

(Subscription Rates)

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 12 00 வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00 வெளிநாடு ரூ. 200 00

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦அ, ஆனி	பரல்
ருக	சூலை 1977	கக

மனோன்மணீய நாடகப் பேராசிரியர்க்கு மாநகரில் சிலையமைத்தல்

தமிழினம் தானுற்ற மயக்கநிலை தவிர்ந்து எழுச்சியுறும் வண்ணம் அரும்பணியாற்றிய பெருந்தகையாளர்களுள் குறிப்பிடத் தக்க சிறப்பு வாய்ந்தவர் பல்துறைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் ஆவர். மறைமலையடிகள் என்னும் செந்தமிழ்க் கதிரவன் தோன்று முன்னரே தமிழுலகின் விடிவெள்ளியாகத் தோன்றி விளக்கஞ் செய்த பெருமை மனோன்மணீயப் பேராசிரியர் அவர்களையே சாரும்.



செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைச் செம்மையாகக் கற்றும், ஆங்கிலம் பயின்று பற்பல பட்டங்கள் பெற்றும், மெய்ப்பொருளியல், அறிவியல், வரலாறு ஆகிய துறைகளில் பெரும் புலமையுற்றும் செம்மாந்த நிலையில் விளங்கிய சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழினத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் செய்துள்ள நலமிகு பணிகள் அளவிடற் பாலனவல்ல.

இருள் கவ்விக்கிடந்த தமிழ்நாட்டு வரலாற்றுராய்ச்சித் துறையில் திருஞானசம்பந்தர் காலம் (The Age of Thirugnana-

sambandhar) என்னும் ஒளிவிளக்கத்தை ஏற்றிவைத்துத் தெளிவுறுத்திய ஒள்ளியர் சுந்தரனுர் அவர்களே ஆவார்கள். இத் திருஞானசம்பந்தர் காலவரையறையை அடியொற்றியே பற்பல காலக்கணிப்புகள் நிலைபெறுத்தப்பட்டன என்பது குறிப்பிடத் தக்கது.

முழுதுலகும் போற்றத்தக்க பெருமை வாய்ந்த நம் முந்து தமிழ்மொழி 'முத்தமிழ்' என்னும் சிறப்பு வாய்ந்திருப்பினும் அயலவர்தம் விரகாண்மையாலும், இயற்கை ஊறுபாட்டாலும், தமிழ்மக்களின் அக்கறையற்ற போக்கினுலும், 'தமிழில் நாடக நூலொன்றும் இல்லை' எனும்படி நேர்ந்த பெருங்குறைபாட்டைப் போக்கிடும் வகையில் தம் இருமொழிப் பயிற்சியும் பல்துறையறிவும் மிளிரத் தனக்குவமை இல்லாத தனிச் சிறப்பு வாய்ந்த 'மனேன்மணீயம்' என்னும் நாடக இலக்கியத்தை ஆக்கி வழங்கியமையால் சுந்தரனுர் அவர்கள் அத் துறையில் பற்பல நூல்களை உருவாக்குதற்குப் பலருக்கும் ஆர்வத்தையும் மன எழுச்சியையும் மிகுக்கும் தூண்டுகோலாகவும், வழிகாட்டியாகவும விளங்குகின்ருர்.

பேராசிரியர் அவர்கள் தமிழ் நூல்களை முறையாகப் பாகுபாடு செய்து 'நூற்றெகை விளக்கம்' என்னும் நூலை ஆக்கி வெளியிட்டுள்ளார்கள். நூலக அறிவியல் துறையில் சிறப்புற்று விளங்கிய பண்டாரகர் அரங்கநாதன் அவர்கள் நூலகத்துறை வளர்ச்சியுருதிருந்த அற்றைநாளில் பேராசிரியர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியைப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள்.

மனேன்மணீயத்தைப் பின்பற்றிப் பற்பல நாடகநூல்கள் எழுந்துள்ளன. நமது சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் உயர்திரு சுந்தரம்பிள்ளை யவர்கள் பெயராலேயே ஒரு நாடகவிலக்கியப் பரிசுத் திட்டத்தை உருவாக்கி 'அனிச்ச அடி' என்னும் நாடகத்தைத் தேர்ந்தெடுத்து வெளியிட்டுள்ளது. அண்மையில் 'ஊமைக்குயில்' என்னும் மற்றெரு நாடகத்தையும் வெளியிடக்கூடிய நிலையில் உள்ளது. ஆயினும் இவையெல்லாம் மனேன்மணீயத்தின் தனிப்பெருமையை விளக்கும் இயல்பினவாகவே உள்ளன. திருக்குறள் போலும் பிறிதொரு வாழ்வியல் அறநூலும், சிலப்பதிகாரம் போலும் மற்றெரு முத்தமிழ் இலக்கியமும், திருத்தொண்டர் மாக்கதை (பெரியபுராணம்) போலும் இன்னெருவரலாற்று இலக்கியமும் தோன்ற முடியாத சிறப்பினவாக அவை விளங்குதலபோல் மனேன்மணீய நாடகமும் தனிச் சிறப்பு வாய்ந்த பெருநூல் என்பது ஒருதலை.

நம் அருமைத் தாய்மொழியின் பெருமைசால் தனிச் சிறப்பைச் சுட்டிக் காட்டி மனோன்மணீய நாடகத்தில் பேராசிரியர் சுந்தரனார் யாத்து அமைத்த 'நீராரும் கடலுடுத்த' எனத் தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்துப்பா தமிழ்ப் பெருமக்களைத் தட்டி யெழுப்பியது. இதன் விருப்பம் உணர்ந்தே கடந்த காலத்தில் விளங்கிய தமிழக அரசினர் இப் பாடலை அரசின் தமிழ்வாழ்த்துப் பாடலாக அறிவித்துச் செயல்படுத்தி வந்ததை இன்றைய அரசும் கடைப்பிடித்து வருகின்றது.

தவப்பெரு மகனாராகிய சுந்தரம்பிள்ளையவர்கள் திருநெல்வேலி மதுரைத் திரவியம் தாயுமானார் இந்துக் கல்லூரி தோன்றுதற்கு வாயிலாக இருந்த திருநெல்வேலி ஆங்கிலத் தமிழ்க் கல்விச் சாலையின் தலைவராகப் பணியாற்றினார்கள். திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் பேராசிரியராகவும், சென்னைப் பல்கலைக் கழக உறுப்பினராகவும் விளங்கினார்கள். திருசிரபுரம் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரனார் அவர்களின் மாணாக்கருள் ஒருவரும், தவத்திரு மறைமலையடிகளாரின் இயற்றமிழ் ஆசிரியருமான நாகை நாராயணசாமி பிள்ளையவர்களிடமே சுந்தரம் பிள்ளையவர்கள் யாப்பிலக்கணத்தைத் தெளிவுறப் பயின்றார்கள். தமது இளந்தைக் காலத்தில் மறைமலையடிகளார் பேராசிரியர் அவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களால் பாராட்டப் பெற்றுச் சான்றிதழ் வழங்கப் பெற்றார். எதிர் காலத்தில் அடிகளார் செய்த அரும்பெரும் பணிகளுக்கெல்லாம் பேராசிரியர் அவர்கள் இளந்தைக்கால ஊக்கமும், நல்வாழ்த்தும் துணைக்காரணங்கள் எனலாம்.

சமயக் கருத்துகள், அறிவியற் கருத்துகள் முதலியன செறிந்தும், இலக்கிய நயம் மிகுந்தும், பழைமையும் புதுமையும் பாங்குறப் பொருந்தியும் விளங்கும் மனோன்மணீயத்தின் மாட்சியை மாணவருலகம் உணரும் வண்ணம் பல்கலைக் கழகத்தினர் தொடர்ந்து பாட நூலாக வைப்பது வழக்கமாக இருந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் அந் நிலை மாறியுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களில் ஆண்டுக்கொன்றில் 'மனோன்மணீய நாடகம்' பாடமாக வைக்கப்பெறுதல் வேண்டுமென்பது சொல்லாமலே செய்தற்பாலதாகும். எனவே பாடநூற் குழுவினர் கவனம் செலுத்தி மனோன்மணீயப் பயிற்சி இடையறவு படாவண்ணம் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

நம் அருமைத் தமிழின் தனிப்பெருஞ் சிறப்பை விண்டு விளக்கியும், என்றும் நிலைநின்று விளங்கும் மனோன்மணீ

யத்தை ஆக்கி வழங்கியும், தமிழக வரலாற்று ஆராய்ச்சிமுறை காட்டியும் பெரும்பணி யாற்றிய பேராசிரியர் அவர்கட்குத் தமிழ் நாட்டின் தலைநகரமாக விளங்கும் சென்னை மாநகரில் மக்கள் புழக்கம் அதிகமாக உள்ள ஒரு சிறந்த இடத்தில் புகழ்பெறத் தக்க ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவது இன்றியமையாத தாகும்.

சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடந்த ஞான்று தமிழ்ப்பணி புரிந்த பெருமக்கள் பலர்க்குச் சிலைகள் நிறுவப்பட்டன. அப்போதே பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கட்கும், தவத்திரு மறைமலையடிகளவர்கட்கும் சிலை நிறுவப் பட்டிருத்தல் வேண்டும். அக் குறைபாட்டைப் போக்கும் வகை யில் இப்பொழுதாயினும் முதற்படியாகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கட்குச் சிறந்த நினைவுச் சின்னம் எழுப்பின் நன்று. அதுவும் ஓர் அழகிய செய்குன்றின்மேல் எழுப்பப்படின் மிகவும் சிறப்பாகவும் புதுமையாகவும் இருக்கும்.

வையகப் புதுமையாக விளங்கும் வள்ளுவர் கோட்டத்தின் எதிர்ப்புறமுள்ள சாலைக் கூடலில் பேராசிரியர் அவர்கட்குச் சிலை நிறுவலாம் என்று கருதுகின்றோம்.

"வள்ளுவர்செய் திருக்குறளை மருவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி"

என்று தெய்வத் திருக்குறள் ஏனை அறநூல்கள் பலவற்றையும் விட விஞ்சிய சிறப்பினதாய் விளங்கும் மேன்மையைப் போற்றிப் புலப்படுத்தியும், திருவள்ளுவர்தம் அருங் கருத்துகளை மனோன் மணீயத்தின்கண் பற்பல தக்க இடங்களில் பொருத்தமுற அமைத்தும் சிறப்பித்த பேராசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்கட்கு வள்ளுவர் கோட்டத்தின் அருகில் சிலை நிறுவுதல் எவ்வாற்றா னும் பொருந்துவதேயாம்.

சென்னைக் கடற்கரையிலுள்ள போர் நினைவு கல்மண்டபத் தின் தென்புறத்திலுள்ள முக்கோணத் திடலில் தெற்குநோக்கி மும்மொழிப் பெரும்புலவர் மறைமலையடிகளார் திருவுருவச்சிலை ('செல்வி'சிலம்பு 44 பரல் 12இல் பார்க்க) அமைக்கும் பொருட்டு அப்போதைய அரசுக்குக் கழகம் வரை படத்துடன் விண்ணப்பம் அனுப்பியதோடு, அதன் பக்கமுள்ள பூங்காவுக்கும் அடிகளார் திருப்பெயரைச் சூட்டும்படி வேண்டி யுள்ளோம். இவற்றை நிறைவேற்றுவது இற்றைத் தமிழக அரசின் கடமை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ௩க, பரல் ௧0, பக்கம் ௪௪௮ இன் தொடர்ச்சி)

13. இறப்பு பிறப்புகளில் தூல உடம்பு உயிர்க்கு உண்டாகிறது. அவ்வுடம்பு அறியாமைப் பொருளாதலால் உயிரின் இருவினை காரணமாக முதல்வனால் அது உருவாக்கப்படுகிறது. அப்படி உருவாக்கும் போது அதற்கு மூலம் இருக்கவேண்டும். அந்த மூலம் அதன் தன்மாத்திரைகள். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தும் தன்மாத்திரைகள் எனப்படும். இத் தன்மாத்திரைகள் மாயையினால் ஆன காரியங்கள். ஓசை என்னும் தன்மாத்திரையிலிருந்து வானமும், ஊறு என்னும் தன்மாத்திரையிலிருந்து காற்றும், ஒளி என்னும் தன்மாத்திரையிலிருந்து தீயும், சுவை என்னும் தன்மாத்திரையிலிருந்து நீரும், நாற்றம் என்னும் தன்மாத்திரையிலிருந்து மண்ணும் உருவாகின்றன. மண் முதலிய இந்த ஐம்பெரும் பொருள்களின் ஆக்கமே உலகும் உடம்புமாகும்.

தன்மாத்திரைகளாலும் அவற்றினும் நுட்பமான மனம் முதலிய கருவிகளாலும் உருவாவது சூக்கும உடம்பு.

இப்படி ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுமே யல்லாமல் ஒன்றுமே இல்லாமல் எவையும் தோன்றிவிடா. ஒருவகையான 'சத்'தென்னும் மாயையாகிய மூலப்பொருளுண்மையிலிருந்து ஒவ்வொன்றும் தோன்றுதலால், அப்படித் தோன்றும் முறையைச் 'சற்காரிய வாதம்' என்பர்.

14. உயிர்கள் இறந்தபின் அவற்றின் பற்றுக்கோடு சூக்கும உடம்பென்று கூறப்பட்டிருக்கிறது. அது 'பூதசார உடம்பு' 'யாதனா உடம்பு' 'பூத உடம்பு' என மாறும்போதெல்லாம் உயிர்கள் அவ்வவ் வுடம்பில் இயக்கங் கொள்ளும். அவ்வவற்றினுள்ளும் சூக்கும உடம்பு நிலைபெற்றிருக்குமாதலால் சூக்கும உடம்பைப் பற்றுக்கோடாகக் கொள்ளுமெனவும், 'பூதசார உடம்பு' முதலியவற்றில் இயங்கு மெனவும் அறிதல் வேண்டும்.

15. உயிர்கள் இறந்தபின் அவற்றின் நிலை, 8ஆம் பிரிவில் சொல்லப்பட்டது.

16. அந் நிலையில், வினைகளின் செயல்கள் எப்படி என்பது தெரியவேண்டுவதுதான். பூமிமேல் பிறந்து வாழ்க்கை

நடத்தும்போது செய்த வினைகள் பலவகைப்படும். நற்செயல்கள் செய்து நல்வினை ஈட்டப்படுவதும் தீச்செயல்கள் செய்து தீவினை ஈட்டப்படுவதும் உண்டு. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றபடி சில வினைகள் மண்ணுலகில் உடனே நுகரப்படுவதும் உண்டு. மீளப் பிறவி எடுத்து மீண்டும் மண்ணுலகில் எங்கேனும் பிறக்கும்போது நுகர்வதும் உண்டு. இத்தகைய வினைகள் மண்ணுலகிலேயே நுகரும் இருவினைகள்; உயர்ந்த நல்வினைகள் சில துறக்க உலகில் சென்றுதான் நுகர வேண்டும்; சில கொடிய தீவினைகள் செய்யும்போது அவை அவற்றிற்கேற்ற இடமாகிய நரக உலகில் சென்றுதான் நுகர வேண்டியிருக்கும். துறக்க உலகிலும் இருள் உலகிலும் சென்று நுகரத்தகுந்தன அல்லாதவை, சூக்கும உடம்பிலேயே சில காலம் இருக்கும்போது நுகரப்பட்டுவிடும். மண்ணுலகிற் பிறந்துதான் நுகரவேண்டும் என்று இருப்பவை, தூல உடம்பாகிய பூதஉடம்பு எடுத்து மீண்டும் மீண்டும் பிறவிகளில் உழன்று நுகர்ந்து தீர்க்க வேண்டிய நிலையில் உள்ளன. இவையெல்லாம் வினைகளின் தரத்துக்குத் தக்கபடி அமைவனவாகும்.

17. மண்ணுலகிற் செய்யும் வினைகள் சில துறக்க உலகிற் சென்று நுகரவேண்டிய தகுதி உடையனவானால் அவையெல்லாம் புண்ணியங்களாக மாறும். இருளுலகிற் சென்று நுகர வேண்டியிருப்பவை பாவங்களாக மாறும்.

உணவுப் பொருள்கள் மண்ணுள் மண்ணாக உள்ளபோது மக்கள் நுகரமுடியாது. அவை உணவுப் பொருளாய் மாறினால் மட்டும் உணவாக உண்டு இன்புற முடியும். இத்தகைய விளைவு தான் வினைகள் புண்ணியங்களாக மாறுவது.

சில விளைவுகள் உண்டால் துன்பந் தரும். எருக்கங்காய் முதலியன அந்நிலைக்குரியன. அப்படிப் பாவமாய் விளையும் தீவினைகளும் உண்டு. அவற்றை இருளுலகில் சென்று நுகர வேண்டும்; நுகரும்போது துன்பமாய் இருக்கும். பூதஉடம்பில் மண்ணுலகிற் பிறந்து நுகரும் வினைகள், நுட்ப ஏறுவினைகளாகவும் பிறப்பு நிலையில் ஏன்ற வினைகளாகவும் இருக்கும்.

இவற்றை எண்ணும்போது, நல்வினைகளில் துறக்க உலகிலேயே நுகரத் தகுந்த மிகச் சிறந்த நல்வினைகளே 'புண்ணியம்' எனவும், இருளுலகிலேயே நுகரத் தகுந்த மிகக் கொடிய தீவினைகளே 'பாவங்கள்' எனவும் பெயர் பெறும் என்று தெரிகிறது.

''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருவினைப் பயனிடை''

என்பது காண்க. 'இருவினை' என்னுமல் 'இருவினைப் பய னிடை' என்றதும் நினைவு கூர்க.

அவையெல்லாம் நுகர்ந்தபின், மற்றப் பொதுவினைகளை நுகரும் பொருட்டு உயிர்கள் மண்ணுலகில் பிறக்கக் கூடும் என வும், மிக எளிய பொதுவினைகளெல்லாம் சூக்கும உடம்பிலேயே நுகரப்பட்டுவிடும் எனவும், எஞ்சிய மற்றவைகளை நுகரும் பொருட்டே மண்ணுலகிற் பிறவிகள் எடுக்கும் எனவும் அறிய லாம்.

18. புண்ணிய பாவங்கள், பொது இருவினைகளின் வேறு விளைவுகள்; அவை மண்சாரம் முதலியன உணவுப் பொருள்க ளாகவும் உணவல்லாத சில பொருள்களாகவும் விளைவதைப் போன்றவை. இருவினைகளின் திரிபு என்று இவற்றைச் சொல்லலாம்.

19. பொதுவாக உள்ள இருவினைகள் ஒரு பிறவியிலேயே நுகர்ந்து தீராமையால், உயிர்கள் மீண்டும் மீண்டும் பல பிறவி களில் பிறந்து உழல்கின்றன. நல்வினை தீவினைகளாயிருந் தாலும் செயல்களைப் பயன் கருதாமல் பற்றற்றுச் செய்து வந்தால் பிறவிகள் குறைந்து போகும். பற்றறுதலின் நிறைவு உண்டாகும்போது பிறவிகள் அற்றுவிடும். அதிதேவர்களாக உயர்தலோ அல்லது ஆண்டவன் திருவடியை அடைந்து வீடுபெறுதலோ உயிர்களுக்கு வாய்க்கும்.

20. கடவுளே உயிர்களும் உலகங்களுமாய்த் தோன்றிக், குடத்தின் வெளிப் புறத்தின் வெளியிற் கலப்பதுபோல் மீண்டும் கடவுளாகவே ஒன்ருய் விடுதல் என்ருல், அதனுல் பல இழுக் குகள் நேருகின்றன.

அந் நிலையில் உயிர்களும் உலகங்களும் கடவுளே என்று கொள்ளப்படுதலால் உயிர்கள் செய்வனவெல்லாம் கடவுட் செயல்களே ஆகின்றன. உலகத்தில் பற்றுணர்வோடு தீவினை களாக நடப்பதும் கடவுட் செயல் என்றே எண்ணி, நல்வினைக் கும் தீவினைக்கும் பேதம் காணுமல், வாழ்க்கை முன்னேற்றம் என்பதும் இல்லாமல், முயற்சிகளும் இல்லாமல், மக்கள் வீணுவர்.

மேலும் 'நீதிநூல்' 'அறமன்றங்கள்' 'அரசு' முதலிய எதுவுந் தேவையற்றனவாய் எல்லாம் வீண்செயல்களாய் முடியும்.

ஓரறிவு உயிர் ஈரறிவு உயிர் முதலியனவாய்ப் பிறப்பதிலும் பயனில்லை.

கடவுள் பேரறிவுப் பொருளாதலால் பயனில்லாமல் ஒரு காரியத்தைச் செய்துகொண்டிருக்கும் பித்தரைப் போன்றவ ராவார்.

இங்ஙனம் பல இழுக்குகள், கடவுளே உலகுயிர்களாகி அவை மீண்டும் அவராகவே ஆகும் என்று சொல்வதில் உள்ளன.

21. உயிர்களுக்கு, மறுபிறவி இல்லை என்று சில மதங்கள் கூறுவதில், வினைகள் இல்லை என்பதும், அவற்றின் புசிப்பு களைச் சிறிதாவது புசித்தே தீரவேண்டுமென்பதும், வாழ்க்கை முன்னேற வேண்டும் என்பதும், பிறவும், இல்லையாகின்றன. வாழ்க்கையில் ஏது செய்தாலும் செய்யலாம் என்னும் வீண் துணிவுக்கு இடமாகின்றது. உயிர்கள் இறந்த பின் இறைவ னுலகத்திற்கே சென்றுவிடுகின்றன என்றால், அவை அடியார் களாகவே பிறக்க வேண்டுமென்பதும், பிறந்த பிறவியில் எல் லாரும் பற்றற்ற பெருமக்களாகவே நடந்துகொள்ள வேண்டும் என்பதும் துணிய வேண்டியிருக்கும்; உலகியற்கையில் அப்படி இல்லையே!

உயிர்கள் பல திறமாய்க் காணப்படுதலால், அவற்றின் செயல்களும் பலவேறு வகைகளாய் உள்ளன. அவையெல் லாம் உயர்ந்தவையாய் நிகழ்வதற்கு ஒரு பிறவி போதாது. பல பிறவிகள் எடுத்து உழன்று நிலைமாறவேண்டும்.

அல்லாமலும், எல்லாச் செயல்களுக்கும் ஏற்றபடி சூக்கும உடம்பிலேயே இறைவனிடம் தீர்ப்பு நாள் கொண்டு, எல்லாச் செயல்களும் பயன்பட்டு விடுவதில்லை. அப்படி இறைவன் உலகத்திலேயே அறியாமை தீர்ந்து அறிவு பெருகிச் சிறக்க முடியுமென்றால், ஒரு பிறவிகூட நிகழாமலே எல்லாரையும் இறைவன் உலகத்திலேயே உயர்த்திவிடக்கூடும். அது மாட் டாமையினாலேதான் பிறவிக்கு வர நேர்கின்றது.

பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, உயிர்கள் அவற்றை உணர்தல் முக்கியம்; உணராததற்குமுன் மன்னிக்கப்படுவ தில்லை. சிறை சென்று தண்டனை பெற்றும் எத்தனையோ பேர் மீண்டும் மீண்டும் அதே குற்றங்களையும் வேறுபல குற்றங்களை யும் செய்து, மீண்டும் மீண்டும் சிறை புகுதலை நேரே பார்த்த லால், குற்றங்களை உணர்வது அத்தனை எளிதில் இல்லை என்று தெரிகிறது.

உணராத நிலையில் நன்மைகள் செய்தலாலேயே குற்றங் களை உணர்வோர் அரியராய் இருக்கின்றனர். அத்தகை

யோர்க்கும் நன்மைகள் செய்வதே முடிந்தவரையில் மற்றவர் கடமையாகுலும். மறுபிறவி இல்லை என்போர்கூட அங்ஙனம் செய்தல் அரிதாயிருக்கிறது. தெரிந்து குற்றங்கள் செய்வோரே மிகப் பலராய் இருக்கின்றனர். அதனை 'மோகம்' என்று சாத்திரம் கூறும். இது அறியாமை மலத்தின் காரியமாய் இருக்கிறது.

மறுபிறவி யில்லையென்பதில் ஒரே பிறவிதான் உயிர்க்கு உண்டு என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஒரே பிறவியில் இறையுலகு சேரும் மேன்மையான உயிரும் இருக்கலாம். எல்லா உயிர்களையும் அப்படிச் சொல்லுவதற்கில்லை.

22. உலகத்தில் ஒவ்வொரு பொருளும் தூலம் சூக்குமம் காரணம் என்ற மூன்று பிரிவுகளை உடையனவா யிருக்கின்றன. 'தேங்காய்' என்று எடுத்துக் கொண்டால் அதன் புறப்பிரிவாகிய மட்டையும் ஓடுகளும் அதற்கு உள்ளன. அதோடு தேங்காய்ப் பருப்பும் தீவிய நீரும் என சூக்குமப் பொருள்களும் இருக்கின்றன. அவற்றிற்குள்ளே எல்லாவற்றின் காரணமாகிய தேங்காய் முளையும் இருக்கிறது.

அப்படியே 'சாற்றுக் கொடி' என்று எடுத்துக்கொண்டால் புறத்தில் தோலும் உள்ளே சுளையும் அவ் விரண்டிற்கும் காரணமாகிய விதையும் முறையே தூல சூக்கும காரணங்களாய் உள்ளன.

உடலுக்கு மட்டும் வேறு கூறமுடியுமா? தூல உடம்பும் சூக்கும உடம்பும் காரண உடம்பும் கட்டாயம் கொள்ளவே வேண்டும். காரணத்தின் காரியமாய்ச் சூக்குமமும் அச் சூக்குமத்தின் காரியமாய்த் தூலமும் உண்டாகி ஒன்றுக்கு ஒன்று பாதுகாப்பாய் உள்ளன.

மக்கள் தலையையே இதற்கு எடுத்துக்காட்டாய்க் காணலாம். மிகுநுட்பக் காரணப் பொருளாகிய மனமும் சூக்குமப் பொருளாகிய மூளையும், தூலப் பொருளாகிய மண்டையோடுந் தலைமயிரும் ஒன்றுக்கொன்று பாதுகாப்பாய் உள்ளன அல்லவா?

23. காரணத்திலிருந்து சூக்குமமும் சூக்குமத்திலிருந்து தூலமும் கருவிற் காரியப்படுதல், ஒன்றுக்கொன்று பாதுகாவலாய்ப் பயன் விளைத்தற்கேயாம்.

தலையைப் பற்றிக் கூறும்போது மண்டையோடும் தலைமயிரும் அவ்வளவு முக்கியமாக உடனே மக்கள் நினைவுக்கு

வருவதில்லை. காரணப் பொருளாகிய மனமும் அப்படித்தான். சூக்குமப் பொருளாகிய மூளைதான் உடனே நினைவுக்கு வருகிறது. மூளை இருக்கிறதா இல்லையா என்று கேட்பதுதான் உலகத்தில் பரவலாய் இருக்கிறது. மனம் இருக்கிறதா இல்லையா மண்டையோடு இருக்கிறதா இல்லையா என்றெல்லாம் கேள்விக்கு அவ்வளவாக வருவதில்லை. ஒவ்வொன்றும் அதனதன் நிலையில் முக்கியமாய் இருந்தும், சூக்குமப் பொருளாகிய மூளை மட்டும் மக்கள் கேள்வியில் முக்கியம் கொள்வதைப் பார்க்கிறோம்.

அப்படித்தான் உடம்பிலும், சூக்கும உடம்பு உண்மையும் முக்கியமும் பெறுகின்றது. தேங்காயில் சாற்றுக்கொடியில் சூக்குமப் பொருளாகிய தேங்காய்ப் பருப்பையும் நீரையும் சுளையையும் மக்கள் முக்கியமாகக் கருதுவர். அச் சூக்குமப் பொருள்களுக்காகவே பெரும்பாலும் அவற்றைக் கையாளுகிறார்கள். அப்படியே உடம்பிலும் சூக்கும உடம்பை முக்கியமாகக் கருதுதலும் கையாளுதலும் வேண்டும்.

சூக்கும உடம்பு உண்டென்பதும், கையாளுதலில் அது பரவலாய்ப் பயன்படுதலும், உடம்பு வகையில் மக்கள் முதன்மையாய்க் கொள்ளவேண்டியிருக்கின்றது.

24. சூக்கும உடம்புக்குப் 'புரியட்ட ரூபம்' என்று ஒரு பெயர் உண்டு. 'அட்ட ரூபம்' ஆனதனால், எட்டுப் பொருள்களால் ஆனது சூக்கும உடம்பு என்று கொள்ளவேண்டும். தன்மாத்திரைகள் ஐந்து, மனம் புத்தி அகங்காரம் என்னும் அகக்கருவிகள் மூன்று ஆக எட்டு நுண்பொருள்களால் சூக்கும உடம்பு உருவாயிருக்கிறது.

காரண உடம்பு என்பது, சுத்தமாயைக் கருவிகளால் ஆனது.

தூல உடம்பு என்பது மெய் வாய் கண் மூக்குச் செவியும், வாக்கு பாதம் பாணி பாயுரு கருவாயும், மண் நீர் தீ காற்று வானமும் சேர்ந்தவை.

'மிசிர மாயை' என்னும் கலப்பு மாயையின் கலைக் கருவிகள் தூல சூக்கும உடம்புகளை இயக்குகின்றன. காரண உடம்புக் கருவிகள் வழி இயங்குகின்றன.

இனி, ஆசிரியர் தரும் மேற்கோள், 'ஆன்மாக்கள் மாறிப் பிறந்து வரும்' என்பது. இதற்கு அவர் கூறும் காரணம், 'தோற்றமும் ஈறும் உள்ளதற்கல்லது உளதாதல் இன்மையான்' என்பது.

தோற்றம் பிறப்பு; ஈறு இறப்பு; உள்ளதற்கு உரிமை உள்ள ஆன்மாவுக்கு; உளதாதல் இன்மையான்—உண்டாதல் இல்லாமையால்; இக் காரணத்தால், மீளப்பிறத்தற்கும் இறத்தற்கும் உரிமையுள்ளது ஆன்மாவே அன்றி, வேறு அறிவிலாப் பொருள்களாகிய உடம்பன்று என்பது பெறப்படும். ஆகவே ஆன்மாவுக்குத்தான் பிறப் பிறப்பு என்பது அவர் கருத்தாகிறது.

இதற்கு அவர் காட்டும் எடுத்துக்காட்டு வெண்பா:

"கண்ட நனவைக் கனவுணர்வின் தான்மறந்து
விண்படர்ந்தத் தூடு வினையினால்—கண்செவிகெட்டு
உள்ளதே தோற்ற உளமணுவாய்ச் சென்றுமனந்
தள்ள விழும்கருவிற் றான்."

நனவு கனவுகள் இதில் உவமைகளாய் வருகின்றன. முற்பிறவியின் நினைவுகளைப் பிற்பிறவியில் ஆன்மா மறந்து விடுகிறது. அந்த மறப்பை, அம்மை மறைப்பம்மையாகிச் செய்கிறது. நனவு நிகழ்ச்சிகள் நிலையில் உயிர்கள் இருக்கும்போது மறந்து போகின்றன. அதுபோல உலகத்தில் இறந்தவுடன் ஆன்மா, பிறவியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை மறந்துவிடுகிறது.

மறந்து விண்ணுலகம் படர்வதானால் 'பூதசார' உடம்பு எடுத்து அதனோடு சென்று துறக்கத்தை நுகர்ந்து பின்பு அந்தத் துறக்க நுகர்வையும் மறந்து விடுகிறது.

மண்ணுலகத்தில் நுகரத் தகுந்த வினைகளோடு அவ்வினைக்கு ஏற்றபடி சூக்கும உடம்பு மாறி அணுப்போல் நுணுகி, மீளப் பிறப்பதற்காக, மனம் செலுத்தக் கருவிற் புகும் என்பது இச் செய்யுளின் கருத்து.

பிறவியில் இருக்கும்போது இறப்பு நேர்ந்தால் முதலில் பார்வையும் அடுத்துக் கேள்வியும் தளர்ந்து கெட்டுவிடுதல் இயல்பு. உடம்பு அழிந்தபின் உயிரின் செயல்களுக்குக் காரணமாய் உள்ளது சூக்கும உடம்பு; அது 'பூதசார' உடம்பாகவோ, 'யாதனா' உடம்பாகவோ, 'பூத' உடம்பாகவோ தோற்றும்.

பூத உடம்பு எடுத்து மண்ணுலகிற் பிறப்பதானால், சூக்கும உடம்பு அணுப்போல் நுணுகி வினைக்கேற்றபடி மனம் செலுத்த உயிர் கருவில் விழும்.

செய்யுட் பொருள்: கண்ட நனவை—வாழ்க்கையிற் கண்டவற்றை; கனவு உணர்வின்—கனவு உணர்வில் மறந்து விடுதல் போல; தான் மறந்து—ஆன்மா மறந்து; விண்

படர்ந்து—அப்போது சூக்கும உடம்பிலிருந்து தோன்றிய 'பூத சார' உடம்போடு துறக்க உலகம் சென்று; அத்தூடு—அவ் வுடம்போடு நுகர்ந்து; வினையினுல் மண்ணுலகத்தில் மட்டும் நுகரத்தக்க எஞ்சிய வினையினுல்; கண் செவி கெட்டு—முதலிற் கண்ணொளியும் அடுத்துச் செவி ஒலியும் முற்பிறப்பில் அழிய, உள்ளதே—அப்போது உள்ள சூக்கும உடம்பே; தோற்ற—பூதசார உடம்பு, யாதனு உடம்பு, பூத உடம்பு எனக் காரியப் பட்டுத் தோன்ற; உளம்—உயிர்; அணுவாய்ச் சென்று—மண் ணுலகிற் பிறவி எடுக்கும்போது பூத உடம்பாகிய சூக்கும உடம்பு அணுவாய் நுணுகிச் சென்று; மனந் தள்ள விழும் கருவில் தான்—அவ் வினை காரணமான மனம் சேர்க்கக் கருவிற்குள் ளாகவே புகும்.

நனவைக் கனவுணர்வின்—நனவு நிகழ்ச்சிகளைக் கனவு உணர்வில் மறப்பது போல; இன், உவம உருபாகக் கொள்ளப் படும். தான்—ஆன்மா; படர்ந்து—சென்று நுகர்ந்து; அத் தூடு விண்படர்ந்து என்க; அத்தூடு—அதனூடு; மறத்தல், 'திரோபவச் சத்தி'யினுல்; உள்ளதே தோற்ற என்ருர், 'சற் காரிய வாதமே' சைவ சித்தாந்தம் கூறுதலால். உளம் உயிர்; அணுவாய் என்றது, சூக்கும உடம்பு அணுவாய் நுணுகி; நுணுகி அவ்வாறு செல்லுதலின் அணுவாய் என்ருர். முற்பிறவி யில் கண் செவி கெட்டு இறக்கும்போது, அப் பிறவியிற் செய்த வினைக்கு ஏற்றபடி நினைவு போகும். வினைக்கு ஏற்ற அந் நினைவின்படி இப்போது கரு உண்டாதலால், 'மனந் தள்ள' என்ருர். கருவிற்ருன் விழும், வேறு வகையில்லை என்னும் தேற்றத்தில் கருவிற்ருன் என அழுத்திக் கூறினுர். வினையினுல் எனப்பட்டமையால் இவ்வாறு உயிர் கருவிற்ருன் விழும் என்ற படி; 'தான்' என்பதை அசை எனக் கொள்வதைவிடச் சுருங்கிய நூலாகிய 'சிவஞானபோதம்' போன்றவற்றிற்கு இவ்வாறு உரை கொள்ளுதல் வலிவுடையதாகும். இப்படி, சூக்கும உடம் பின் திரிவுகளில் உயிர் போக்குவரவு புரியும்.

சூக்கும உடம்பிலிருந்தே விடுபடுதலுக்குக் குடத்தின் வெளி, புறத்தின் வெளியாய்க் கலந்து விடுதலை உவமை கூறுவர். அவ்வுவமைக்கு வேருகச் சூக்கும உடம்பின் திரிவுகளாகிய 'பூத' உடம்பும் 'யாதனு' உடம்பும் 'பூதசார' உடம்பும் கொண்டு உயிர்கள் போக்குவரவு புரிவதற்கு, முறையே பாம்பு தோலுரித் தலும், கனவு உணர்வும், யோகிகள் வேறு உடம்பு கொண்டு வேறு வேறு இடங்களுக்குச் சென்று வருதலும் உவமைகளாகக் கூறப்படும்.

அதற்கு வரும் எடுத்துக்காட்டுச் செய்யுள் :

"அரவுதன் தோலுரிவும், அக்கனவும், வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்,—பரவிற்
குடாகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்பது
அடாதுஉள்ளம் போமாறு அது."

பொருள் : அரவுதன் தோலுரிவும் அக்கனவும் பரகாயம் போய்வரும் அப் பண்பும் பரவில் வேறு—உயிர் தனது தூல உடம்பைவிட்டு வேறொரு தூல உடம்பாகிய 'பூத' உடம்பைப் பெறுவதற்குப், பாம்பு, தன் தோலை உரிக்கும் உரிவும்; 'யாதனு' உடம்பு கொண்டு இருளுலகம் சென்று நுகர்வதற்கு, முன் சொன்ன கனவு உடம்பை எடுத்தலும், 'பூதசார' உடம்பு கொண்டு துறக்க உலகம் நுகர்வதற்கு யோகிகள் வேறொரு நுண்ணிய உடம்பு கொண்டு போய்வரும் அப் பண்பும், சொல்லுமிடத்து, இம் மூன்று உவமைகளும் குடாகாய உவமைக்கு வேறு. (எல்லாம் சூக்கும உடம்பு இருக்கும் வரையில் அடையும் பிறத்தலும் இறத்தலுமாகிய வேறு வேறு நிலைகளாகும்.) குடாகாய ஆகாயக் கூத்தாட்டாம் என்பது அடாது—குடத்தின் வெளி புறத்தின் வெளியாக் கலக்கும் விளையாட்டாகும் என்பது அப் பிறப் பிறப்புகளுக்கு அடுக்காது; உள்ளம் போமாறு அது—உயிர்கள் வீடுபேறு அடையும்போது அதுவரையில் நிலைபெற்றிருந்த சூக்கும உடம்பு அழிந்துபோம் வகை அது.

உயிர்கள் வீடுபேறு அடையும்போது, சூக்கும உடம்பு நீங்குதலுக்குரிய குடாகாய உவமையைச், சூக்கும உடம்பின் தொடர்புடைய இறத்தல் பிறத்தல்களுக்குக் கூறுவது பொருந்தாது என்றபடி.

உரிவும்—உரித்தலும்; அக் கனவும் என்பதில், 'அ' என்னும் சுட்டு, முன் வெண்பாக் கருத்தில் வரும் கனவுடம்பைச் சுட்டியது. கனவு—கனவுடம்பிற் கொள்ளுதலும்; அப் பண்பும் அத்தகைய பண்பை மேற்கொள்ளுதலும் பரவில் வேறு என்று மாற்றிக் கொள்ளுக.

பரவில்—எல்லார்க்கும் தெரியும்படி சொல்லுமிடத்து; உள்ளம்—சூக்கும உடம்பு; போமாறு—நீங்குமாறு.

இனி, இரண்டாம் நூற்பாவின் நான்காம் பிரிவுக்கு விளக்கம் வரும்.

நான்காம் பிரிவு 'நீக்கமின்றி நிற்கும்' என்பது. 'ஆணையின் நீக்கமின்றி நிற்கும்' என்பது தொடர். 'ஆணையினோடு

நீக்கமின்றி நிற்கும்' என்று கொள்ளப்படும். ஆணையின் என்பது அருள். ஆதலால் இறைவன் தன் அருளினோடு பிரிவில்லாமல் ஒன்றி நிற்பான் என்பது கருத்து.

அருள் என்னும் அம்மையோடு இறைவன் பொருந்தித் திருவுள்ளம் பற்றுதலால், அம்மையும் அதற்கேற்றபடி, உயிர்கள் இருவினையினால் போக்குவரவு புரிய உதவுகிறது என்பது இதனால் விளங்குகிறது.

மேற்கோளும் காரணமும் :

இதற்கு மெய்கண்டார் கூறும் காரணம் 'ஏகம் அநேகம் இரண்டுமின்றிச் சர்வவியாபியாய் நிற்றலான்' என்பது. இக்காரணத்தால், சத்தியோடு நீக்கமின்றி நிற்கும் இயல்பு தெரிகின்றது.

கடவுள் எங்கும் பரவி இருக்கிறான். உலகமும் உயிரும் கடவுளும் ஒன்றே என்னுதபடியும், கடவுளுக்கு உயிரும் உலகமும் வேறு என்னுதபடியும், இரண்டுக்கும் பொதுவில் அவை எல்லாவற்றிலும் பரவி உடனாய்க் கலந்திருக்கின்றான் என்பதனால், அருளிலும் அவ்வாறு கலந்திருக்கிறான் என்று தெரிகிறது.

உடனாய்க் கலந்திருப்பதென்பது, இறைவனும் அம்மையும் கருத்தொத்துக் கலந்திருப்பதாகும். இறைவன் கருத்தைச் செயற்படுத்துதலே நோக்கமாய் அம்மை கலந்திருப்பதால் அப்பனோடு ஒன்றி நிற்க வேண்டியிருக்கிறது. அப்பன் அம்மையைப் பிரியாமலிருப்பதும் அதற்காகத்தான். இப்படி உடனாய்க் கலந்திருப்பதனால் உலகுயிர்கள் செயலுறுகின்றன.

அம்மையோடு அப்பன் உடனாய்க் கலந்திருப்பதன் நோக்கம், உயிர்களின் பொருட்டு; அவை, இருவினைகள் மாயையுலகம் முதலியவற்றில் செயலுறவேண்டும் என்பது.

அதனால் அம்மையும் அதற்கேற்றபடி ஒத்த கருத்தோடு செயல்பட வேண்டியதாயிற்று. கலந்திருப்பதன் கருத்துக்கேற்ப, அம்மை இயங்குவதாக முடிகிறது.

உடனாய்க் கலத்தல் :

ஒன்றாயும் வேறாயும் கலந்திருக்கும் நிலை, உடனாய்க் கலந்திருப்பதற்குத் துணை செய்கிறது. ஒன்றாயும் வேறாயுங் கலந்திருப்பதோடு உடனாயுங் கலந்திருப்பது தோன்றும்பொருட்டே,

'வியாபியாய்' என்னுமல், 'சர்வ வியாபியாய்' எனப்பட்டது. ஏனென்றல், அவனன்றி ஒரு பொருளும் ஓங்குவதில்லே. எல்லாப் பொருள்களும் அவனே இன்றி அமையாதன. 'சர்வ வியாபியாய்' என்றமையால் அம்மையோடு கலந்திருக்கும் இவ் வியல்பும் உணரப்படுகிறது.

நீக்கமின்றி நிற்கும் என்பதனுல், அம்மையோடு பிரிப்பில் லாமல் பரவியிருப்பது தெரிகிறது; அதனுல் அம்மையோடு இடைவிடாமை தெரிகிறது.

இப்படிச் சொல்லும்போது, அம்மை என்பது ஒன்று தனி யாக உண்டா என்று 'நையாயிகர்' கருதுகின்றனர்; பொருள் வேறு அதன் ஆற்றல் (அம்மை) வேறு, தனித்தனியாக இரண்டு, என்று கருதுவார் 'மீமாம்சகர்'.

அம்மையும் அப்பனும் என வேறுபட்டுத் தமக்குள் ஒருவரை யொருவர் கலந்திருப்பதுபற்றி, அம்மை வேறு அப்பன் வேறு என்று 'மீமாம்சகர் கருதிவிட்டனர்; ஒட்டி ஒரு பொருளாயிருத் தலின் ஒன்றே என்று எண்ணிவிட்டனர் நையாயிகர்; இரண் டுக்கும் பொதுவாக மெய்கண்டார் 'பொன் ஒளிபோல் ஈசன்' என்ற ஓர் உவமையை எடுத்துக் காட்டுகிறுர்.

"எங்குமுள னென்றளவை ஒன்றன் றிரண்டென்னில்
எங்கு முளன்அன் றெவற்றெவனும்—அங்கண்
அவையவன் அன்றில்லே பொன்னெளிபோல் ஈசன்
அவையுடைமை ஆளாம் நாம் அங்கு."

பொருள் :

எங்கும் உளன் என்ற அளவை ஒன்றன்று—இறைவன் எங்கும் பரந்து நிறைந்திருக்கிருன் என்ற கலப்புண்மை, 'அவனும் கலந்த பொருளும் ஒரு பொருளே' என்பதை உரைப் பதன்று; இரண்டு என்னில்—அப்படியானுல் அக் கலப்பு இரு பொருள்கள் கலந்துள்ளன என்பதை உணர்த்துமோ என்றுல், எங்கும் உளன் அன்று—இறைவன் கலப்பை, 'எங்குங் கலந் திருக்கிருன்' என்றலுங் கூடாது; எவற்று எவனும் அங்கண் அவை அவன் அன்றி இல்லே—எங்கும் எதுவும் ஆங்காங்கே அவை யவை இறைவன் அன்றி விளங்குதல் இல்லே என்பதனுல், அங்கங்கும் அவன் இருப்பு இன்றியமையாததாகின்றது; ஆத லால், இரண்டுச்கும் பொதுவாகக், கதிரவனும் கதிரும் கலந் திருப்பதுபோல் கடவுளும் உடனுய்க் கலந்திருக்கும் என்றே

துணிய வேண்டியிருக்கிறது. ஏனென்றால், பிறவியிலும் வீடு பேற்றிலும், அறிவில் பொருளெல்லாம் அப் பெருமானுக்கு உடைமைகளாகவும் சிறிதறிவுப் பொருளாகிய உயிர்களென்னும் நாம் அடிமைகளாகவும் ஆகின்றோம்; (இவ் வேறுபாடுகளும் உள்ளன.)

விளக்கம் :

உலகுயிர்களோடும் அருளோடும் கடவுள் கலந்திருக்கிறு ரென்றால், அவைகளாகவே அவன் ஆகிவிடுவதில்லை; ஒன்றே என்னும்படி ஆகாமையால் 'எல்லாம் ஒன்று' என்று சொல்லுவ தற்கில்லை.

'இரண்டு' என்றும் சொல்ல முடியாது; ஏனென்றால், கலந்திருக்கும்போது பிரிந்து தனியாகத் தெரிவதில்லை. ஆகவே அக் கலப்பை 'ஏகம்' என்றும் சொல்லுவதற்கில்லை; 'அநேகம்' என்றும் சொல்லுவதற்கில்லை; இரண்டுக்கும் பொதுவாக அக் கலப்பு உள்ளது. எல்லாப் பொருள்களுக்கும் அவற்றின் நிகழ்ச்சிகளுக்கும் அவன் தேவைப்பட்டவனாய் இருப்பதனால், உடனாய் நிற்கும் நோக்கம் மட்டும் தெரிகிறது.

இறைவனையும் அருளையும் போலத்தானே உலகுயிர்களும் என்றால், வேறுபாடும் உள்ளதே. அறியாப் பொருள்கள் எல்லாம் அவனுக்கு உடைமைகள்; அறிவுப் பொருளாகிய நாம் அவனுக்கு அடிமைகள்; வீட்டு நிலையிலும் இந் நிலையே; பிறப் புக்கு வருதலும் பிறப்பை நீங்கி வீடுபெறுதலுமான இத் தொழில் களில் இறைவனும் அம்மையும் உயிர்களும் ஒரே கருத்தாய் உள்ளன; கருத்து ஒன்றானாலும், அஃதாவது உடனாய்க் கலந் திருந்தாலும், தன்மையும் செயலும் உணர்வும் வேறு வேறானவை.

முழு நிறைவு :

ஏதுவில், 'ஏகம்' 'அநேகம்' இரண்டுமின்றி எனவும், 'சர்வ வியாபியாய்' நிற்றலான் எனவும், இரண்டு கருத்துக்கள் வருகின்றன. முன் கருத்து பின் கருத்தை நன்கு விளக்கிக் கொண்டு துணையாய் நிற்கிறது. ஒன்றாய் வேறாய் இல்லாமல் கலந்திருப்பதைத்தான் மேற்கோளில் 'நீக்கமின்றி நிற்றல்' என்று ஆசிரியர் கூறினர். அதனால் அக் கருத்தை எடுத்து 'சர்வ வியாபியாய் நிற்றல்' என்பதற்கு விளக்கந்தரும் வகையில் கூறிக் கொண்டார். ஆகவே, 'சர்வ வியாபியாய்' என்பதே நீக்கமின்றி நிற்றல் என்னும் மேற்கோளுக்கு உரிய காரணமாய் இங்கே வந்திருக்கிறது.

முழு நிறைவு (சர்வ வியாபகம்) என்ருல், கடவுள் இல்லாத இடமே இல்லை என்றபடி; அதனுலேதான் 'சத்தியிலும் வியாபகமாய்' இருக்கிருன் என்று தெரிகிறது. 'எங்கும் நிறைவு' என்ருல், எந்தப் பொருளின் ஆற்றலும் அதனுள் அடங்கிவிடுகிறது. 'சத்தி'யோடு இரண்டறக் கலக்காமல், சிவத்தின் கருத்தைச் 'சத்தி' ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பில்லை.

நட்பும் காதலும் :

ஒருவர் கருத்தை ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமானுல் அவ் விருவர்க்கும் கலப்பு கட்டாயமாயிருக்கிறது. ஒருவரோ டொருவர், நட்புக் கொள்வதைவிட ஒருவரோ டொருவர் காதல் கொள்வது கலப்புக்கு இன்னும் மேல். அப்படிக் கலந்தால், கருத்து ஏற்றல் என்பதுமட்டுமல்லாமல் கருத்தின்படி செயல்புரிதலும் தோன்றிவிடுகிறது. நட்பு என்பது கருத்துக் கலப்புக்கு; காதல் என்பது செயல் கலப்புக்கு; அஃதாவது உடனுய்க் கலந்து, ஒரு நோக்கம் கொண்டு, கருத்துப்படி செயல்கொள்ளுதல்; அதனுலேதான்; நட்பினும் காதல் இனிது. காதற் கலப்புத்தான், இங்கே அம்மையோடு ஆண்டவன் கலப்பு. காதற் கலப்பைத்தான் முழு நிறைவு (சர்வ வியாபகம்) என்பது. நட்புக் கலப்பு 'வியாபகம்' ஆகும்.

நட்புக் கலப்புக்கு ஆடவர்களும் ஆடவர்களும்கூட உள்ளம் ஒன்றுபடுதல் பொருந்தும். ஆனுல், அது ஓரளவு ஒன்றுபடுதலே. முற்றும் ஒன்றுபடுதல் ஆகாது. உடம்பும் உள்ளமும் எல்லாம் அவர்களிடையே ஒன்றுபடா. நிகழ்வது, அதனுல், 'வியாபக'மேயல்லாமல் 'சர்வ வியாபகம்' ஆகாது.

ஆண்கள் பெண்களிடையே யானுல் காதலுக்கு வாய்ப்புண்டு. அது 'சர்வ வியாபகம்' ஆகும். ஆதலால், அம்மையப்பராய் விளங்கும் கடவுளிடத்தில் ஆண் பெண் வேறுபாடுகள் இருத்தலால், அவர் கலப்பு முழுநிறைவு ஆயிற்று. உலகுயிர்களிடத்தில் ஆண்டவன் கலப்பு இருந்தாலும், அக் கலப்பு முழு நிறைவு என்பதற்கு ஏற்றதன்று. அதனுலேதான் அம்மையினேடு உளதாகும் ஆண்டவன் கலப்பைச் 'சர்வ வியாபியாய் நிற்றலான்' எனக் காரணங் காட்டி ஆசிரியர் விளக்கினர்.

இனி, உலகத்தினிடத்தில் ஆண்டவன் நிறைவு எப்படியிருக்கும் ? உயிர்களினிடத்தில் எப்படியிருக்கும் ? அம்மையினிடத்தில் எப்படியிருக்கும்? என்று இங்கே ஒரு நினைவு தோன்றலாம். மூன்றிலும் ஆண்டவன் ஒரே மாதிரி 'முழுநிறைவாய்' கலந்தில்லை.

கலத்தலில் இருநிலை :

'வியாபகம்' என்றால் பரவியுளன் என்பது மட்டும் பொருளன்று; 'இடம்' பரவலைக் கூறுவதோடு 'உணர்வுத் தர' வேறுபாடும் அதில் உண்டு. 'சர்வ வியாபகத்தில்' இடமும் தரமும் முழுதும் எண்ணப்படும். உலகுயிர்களிடம் முழு நிறைவாகவே இறைவன் இருப்பானாலும், அந் நிலை 'இடம்' பற்றியது; அம்மையோடு கலந்திருக்கும் நிலை உணர்வு வேறுபாட்டுக்கும் உரியது.

பரவல் மூவகை :

உலகத்தினிடத்தில் ஆண்டவன் எங்குங் கலந்திருந்தாலும், 'தூல வியாபகமாய்' கலந்திருக்கிறான். உயிர்களினிடத்தில் 'நுட்ப வியாபக'மாய்க் கலந்திருக்கிறான்; இவ் 'வியாபகத்தில்', உணர்வுத் தரம் சிறிது உண்டு; இடத்தின் 'வியாபக'மும், 'உணர்வின் வியாபகமுமாக' உயிர்களிடத்தில் கலந்திருக்கும் இறைவனது நிலை, சற்று ஓங்கித் தெரிகிறது. அம்மையினிடத்தில் கலந்திருக்கும் நிறைவு, 'மிகு நுட்ப வியாபகம்'; இதில் உண்டாகும் கருத்து, உணர்வுத் தரத்தில் மிக மேலானது; 'இட'மும் நீக்கமின்றி நிற்பது.

'ஒன்றே' என்பது தூலம்; 'வேறே' என்பது நுட்பம்; 'உடனாய்' என்பது மிகுநுட்பம் ஆகும்.

இங்ஙனம் நுட்பமான வேறுபாடுகளில், 'சர்வ வியாபகம்' அம்மையினோடு மட்டும் தகுதியாக நிகழ்தலால், உடனாய்ச் செயற்படுவதற்கு அது உதவுகிறது. இடப் பரவலோடு உணர்வுப் பரவலும் ஒருமித்த கருத்தும் அம்மையோடு பரவுதலிற் கலந்திருத்தலால், 'சர்வ வியாபகம்' என்பது அம்மையினிடத்தில் மட்டும் முழுதும் பொருத்தமாய் உள்ளது. உடனாய் என்பதற்கும் 'சர்வ வியாபகம்' என்பது, சிறப்பாய்ப் பொருந்துகிறது.

இரண்டன்மைச் சிறப்பு :

இனி இக் காரணத்திற்கு, அஃதாவது கருத்துப்படி செயல் புரிவதற்கு, உடனாய் நிற்கும் 'சர்வ வியாபகத்திற்கு', இறைவன் அம்மையப்பராய்த் தம்மில்மட்டும், ஆண் பெண் வேற்றுமையாயினும், ஒருங்கு பொருந்தி ஒரு பொருளாகிய கடவுளாய் வீற்றிருக்க வேண்டியிருக்கிறது. அதனாலேதான் மிகு நுட்பமாகிய 'அத்வைதம்' என்பது, முதலில், அம்மையினிடத்தில் ஆண்டவன் கலந்து ஒருபொருளாய் இருத்தலை வலியுறுத்தும்.

உயிர்களிடத்தில் அம்மையப்பராகிய கடவுளின் கலப்பு, நுட்ப மானது. உலகத்தினிடத்தில் அக் கலப்புத் தூலமானது.

'அத்வைதம்' என்பதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டுமானுல், அம்மையோடு ஆண்டவன் கலந்திருக்கும் மிகு நுட்ப அத்வைத முறையைக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஒன்ருய் வேருய் உடனுய் என்னும் மூன்றில், இது 'உடனுய்ச்' செயல் நோக்கத்திற்கு இன்றியமையாததாய் அமைந்தது.

இக் காரணத்தால், இறைவன் தன் ஆணையின் நீக்கமின்றி முழு நிறைவாய் நிற்றலான், அம்மை செயற்படலாளுள்.

இரு வேறுபாடுகள் ஏன்?

ஒரு கடவுளிடத்தில் அம்மை யப்பர் என்னும் இரண்டு வேறுபாடு ஏன் கொள்ளவேண்டும் என்ருல், ஆசிரியர் மெய் கண்டதேவர் தமது எடுத்துக்காட்டு வெண்பாவில் 'பொன் ஒளி போல் ஈசன்' என்று ஓர் உவமையைக் காட்டுகிருர். பொன் என்பது சூரியன்; ஒளி என்பது கதிர்; கதிரை உடைய கதி ரோனைப் போல் 'அம்மையையுடைய ஈசன்' என்பது இவ் வுவமைக்குக் கருத்து.

சூரியனும் சூரியன் ஒளியாகிய கதிர்களும் வேறு வேரு? அதைப்போல் பொருளும் அதன் சத்தியும் வேறு வேரு?. பொருள் வேறு 'சத்தி' வேறு என்னும் மீமாம்சகர் கருத்தும், பொருளும் 'சத்தியும் வேறன்று' என்னும் நையாயிகர் கருத்தும் பொருந்தா. இவ் விரண்டு கொள்கைகளுக்கும் பொதுவாக, வேறுமன்று ஒன்றுமன்று; உடனுய் நிற்பதென்பதே இறை வனுக்கும் 'சத்திக்கும்' உள்ள தொடர்பு என்று இங்ஙனம் வரு கிறது எடுத்துக்காட்டு வெண்பாவில்.

பொருளும் ஆற்றலும் :

இதைப்பற்றி யாரும் ஐயந் தீரத் தெளிந்துகொள்ள வேண்டும். ஒரு பொருள் என்ருல் அதற்கு ஆற்றலும் உட னிருக்கும். ஆற்றலில்லாமல் எந்தப் பொருளுமில்லை. பொரு ளும் ஆற்றலும் ஒரே தன்மை உடையன அல்ல. ஒரே தன்மை யாயிருந்தால் அதனைப் 'பொருள்' என்றே சொல்லிவிடலாம். 'ஆற்றல்' என்று தனியாகப் பிரிக்க வேண்டுவதில்லை.

ஆற்றல் மட்டுந்தான் இருக்கிறது. அதனை உடைய பொருளென்று வேருென்று இல்லையே. வெறும் ஆற்றலி லிருந்தே (Energy) வேறு வேறு பொருள்களை நாம் உண்டு பண்ணுகிருேம். ஆகவே அடிப்படை ஆற்றலுக்கு வேருக

அதனையுடைய பொருளென்று இல்லை என்று விஞ்ஞானிகளிற் சிலரும் கூறுவர்.

அப்பன் (பொருள்) என்பது வேறு; அதற்கென்று வேறு தனித் தன்மை உண்டு. அம்மை (ஆற்றல்) என்பது வேறு; அதற்கென்று வேறு தனித் தன்மை உண்டு. இவ் வுண்மை யைச் சேக்கிழார் பெருமான்,

"இருட்கடு உண்டவர் (சிவம்) அருளும்
ஈன்றாள் தன் (அம்மை) திருவருளும்"

எனத் தம் பெரிய புராணத்தில் கூறுவார். ஆற்றலால் ஆகிற செயல், பொருளால் ஆவதில்லை. பொருளால் தனிச் செயலும் எதுவும் ஆவதில்லை. செயல் என்றால் அதனை ஆற்றல்தான் செய்யவேண்டும்.

பொருளின் தன்மை, அறிவு; ஆற்றலின் தன்மை, அன்பும் அருளும் அவற்றால் ஆகும் அறச் செயல்களுந்தாம். இப்படி இருவேறு தன்மைகள் இருப்பதனாலேதான் இரண்டும் உடனாய்க் கலந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

அறிவு இல்லாமல் அன்பும் அருளும் அறனும் விளைவ தில்லை. அறிவு இருந்து அன்பு அருள் அறங்கள் விளையாமற் போனாலும் பயனிலலை.

பொருள் என்று ஒன்றிருப்பதே அதனாலாகும் செயலுக்குத் தான்; அகமுகத்தில் அதன் தன்மை அறிவு; ஆற்றலின் (சத்தி) தன்மை அன்பு முதலியன; அறிவு இருப்பதே அன்பு அருள் அறச் செயல்களுக்குத்தாம். இரண்டும் உடனாய் இருப்பதன் உட்கருத்து இதுவே.

மேலுக்கு அறிவு, வன்மையுள்ளது போலத் தோன்றுமா யினும், உள்ளுக்கு அது வன்மை குறைந்ததே. இதுதான் ஆண்மை இயல்பு; பெண்மை இயல்பு, அன்பு அருள் அறங்க ளாகிய செயல் வன்மைகள் மேலுக்கு அவை மென்மைபோலத் தோன்றினாலும் உள்ளுக்கு உரனும் உறுதியும் உடையவை. பெண்மை என்பது இங்ஙனம் உள்ளுறுதி மிக்க மென்மையாய்த் தோற்றும்.

ஆண்மைக்கும் பெண்மைக்கும் இவ்வாறு உள்ள வேறு பாட்டை, ஒன்று என்பது எப்படி? இரண்டும் எப்போதும் ஒன்றாகவே யிருப்பதனால் வேறு என்பதற்கும் வாய்ப்பில்லை. ஆகையினாலேதான் ஒன்றென்றும் கூறமுடியாமல் இரண்டென் றும் சொல்ல முடியாமல் ஒன்றை ஒன்று இன்றியமையாதனவாய் இரண்டன்மையாய் (உண்மை அத்துவிதமாய்க்) கலந்திருக் கின்றன என்று சொல்ல வேண்டியிருக்கிறது. (தொடரும்)

உயிர்மெய்ம்முதல் வேர்ச்சொற்கள்

இத்தொடரின் இறுதிக் கட்டுரை

[ஞா. தேவநேயன்]

விள்[3]—பிளவுக்கருத்து வேர்ச்சொல்.

பிளவுக்கருத்தினின்று பிரிவு, விரிவு, திறப்பு, வெடிப்பு, நீங்கல், செலவு, வெளிவரல், உள்ளீடின்மை, வெறுமை, வறுமை, பயனின்மை முதலிய பல கருத்துக்கள் கிளைக்கும்.

புல்லுதல் = துளைத்தல். புல் = உட்டுளை, உட்டுளைப் பொருள், உட்டுளையுள்ள புறக்காழ் நிலைத்திணை (தாவரம்), மூங்கில், அறுகம்புல், புல்லாங்குழல் முதலிய சொற்களை நோக்குக.

புல்—புள்—பொள்—பொழு—போழ்.

புள்—பிள். பிள்ளுதல் = உடைதல், பிளத்தல், பிரிதல், நீங்குதல்.

பிள்—பிள. பிளத்தல் = பிடுதல், துளைத்து அல்லது வெட்டி உடைத்தல், பிரித்தல்.

பிள்—விள் வுகரம் சொன்முதல் வராமையால், 'வ' முதல் 'வௌ' வரைப்பட்ட வகரமுதற் சொற்கள், பெரும்பாலும் பகர அல்லது மகர முதற் சொற்களின் திரிபாகவே யிருக்குமென்று, முன்னர்க் கூறியதை நினைவுறுத்துக.

விள்(ளு)தல் = (செ. கு. வி.) 1. உடைதல். அந்தக் குடம் கீழே விழுந்ததனல் விண்டு போயிற்று. 2. வெடித்தல். (யாழ். அக.) 3. விரிதல், மலர்தல். (சூடா.) 4. நீங்குதல். 5. விட்டகலுதல், செல்லுதல். தெ. வெள்ளு. 6. வேறுபடுதல், மாறுபடுதல். "விள்வாரை மாறட்ட வென்றி மறவர்" (பு. வெ. 1 : 14)—(செ. குன்றுவி). 1. பிளத்தல். பழத்தை இரண்டாக விண்டான். 2. வாய் முதலியன திறத்தல். "வாய் விண்டு கூறும்" (பாகவத. 1, தன்மபுத்திர. 29) 3. சொல்லுதல். "தன்னிடத்து வந்து விள்ளான்" (திருவாலவா. 33 : 10). 4. வெளிப்படுத்துதல். "உமக்கே விண்டு பேசினல்லால்" (அஷ்டப். திருவரங்கக். 70). 5. பிதிர் முதலியன விடுத்தல். இந்தப் பிதிரை விள்ளு. 6. பகைத்தல். நறவ மார்ந்தவர்...விண்டு... மண்டினர். (சீவக. 418). 7. நீங்குதல். "வினைகளும் விண் டனன்" (தேவா. 928 : 7).

விள்கை=விட்டகலுகை. "விள்கை விள்ளாமை விரும்பி" (திவ். திருவாய். 1:6:5).

விள்ளல்=1. பிரிகை. "விலங்கிற்கும் விள்ள லரிது" (நாலடி. 76). 2. மலர்கை. (சூடா).

விள்ளோடன் தேங்காய்=சிரட்டையினின்று எளிதாகப் பெயருந் தேங்காய். (யாழ்ப்·)

விள்—விளம்பு. விளம்புதல்=1. வாய்விட்டுச் சொல்லுதல், வெளிப்படக் கூறுதல். "உடையது விளம்பேல்". (ஆத்திசூடி.) 2. பலரறியச் சொல்லுதல். நேற்றுப் பெண்ணிற்குப் பரிசம் விளம்பினுர்கள். 3. பொதுமக்கட்குத் தெரிவித்தல், பறைசாற்றுதல். 4. செய்தி பரப்புதல். (பிங்.) 5. சொல்லுதல். "உற்றது விளம்ப லுற்றேன்" (சீவக. 1694).

விளம்பு=சொல்.

ம. விளம்புக.

விளம்பு—விளம்பரம்=எல்லார்க்கும் அறிவிக்கை, பறைசாற்றுகை.

ம. விளம்பரம்.

விளம்பு—விளம்பி=1. கள், 2. அறிவிப்போன் (announcer) சொல்விளம்பி=கள் (குழூஉக்குறி).

விள்—விழி. விழித்தல்=1. கண் திறத்தல். "இமையெடுத்துப் பற்றுவே னென்றியான் விழிக்குங்கால்" (கலித். 144). 2. உறக்கந் தெளிதல். "உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" (குறள். 339). 3. நோக்குதல். "விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பின்" (குறள். 775). 4. தூங்காதிருத்தல். காவற்காரர் இராமுழுதும் விழித்திருப்பார்கள். 5. கவனித்துப் பார்த்தல். "நாட்டார்கள் விழித்திருப்ப............ நாயினுக்குத் தவிசிட்டு" (திருவாச. 5:28). 6. மருண்டு பார்த்தல். கேட்ட கேள்விக்கு விடை தெரியாமல் விழிக்கிருன்.

விழிப்ப=(நி. கா. வி. எ.)=பார்த்த மட்டில், தெளிவாக. "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்ரு" (தொல். உரி. 16).

விழிப்பு=1. கருமத்திற் கவனம், எச்சரிக்கை. எதிரிகள் வலைக்குட் சிக்காமல் எப்போதும் விழிப்பாயிரு. 2. அறிவுக்கண் திறப்பு. சுந்தரம் பிள்ளை தமிழ்த் தெய்வ வணக்கத்தாலும்

மறைமலையடிகள் தனித்தமிழ்த் தொண்டாலும், தமிழ்நாட்டிற் பெருவிழிப்பு ஏற்பட்டுள்ளது.

விழித்துக்கொள்ளுதல் = துயிலுணர்தல், அறிவுக்கண் திறக்கப்பெறுதல்.

விழி=1. கண். (பிங்.) விழியிலா நகுதலை (தேவா. 345: 5). 2. கண்ணுருண்டை. 3. கண்பகுதி, வெள்விழி, கருவிழி. 4. ஓதி (ஞானம்). "தேருர் விழியிலா மாந்தர்" (திருமந். 177).

ஒ. நோ : விழி—L. vide—vise (tsee). Skt. vid (to know).

ஒ. நோ : நாழி—நாடி, ஒடி—ஒசி.

வ. வித்—வேத=அறிவு, அறிவுநூல், ஆரியமறை.

ழகரம் ககரமாகத் திரிவது இயல்பாதலால், E. wkae, L. vigil என்னும் மேலையாரியச் சொற்களும் விழி என்னும் தென் சொல்லொடு தொடர்புடையனவா யிருக்கலாம்.

விள்—விர்—விரி. விரிதல்=1. பிளத்தல். அந்தச் சுவர் விரிந்து விட்டது. 2. அவிழ்தல். "விரிந்துவீழ் கூந்தல் பாரார்" (கம்பரா. உலாவியற். 4) 3. மலர்தல். மணத்துடன் விரிந்த கைதை. (கல்லா. 2). 4. அறுவகைச் சொற்றொடர் களில் வேற்றுமையுருபு முதலியன தொகாது வெளிப்பட வருதல். 5. பரத்தல். "விரிமுக விசும்பு" (சீவக. 329). 6. முற்றுதல்.

ம. விரியுக, தெ. விரியு, க. பிரி (b).

விரித்தல்=1. குடை, மடித்த ஆடை, சுருட்டிய படம் முதலியவற்றை விரியச் செய்தல். "கம்பளரத்தினம் இருக்க ரத்தினக்கம்பளம் விரிக்க" (பழ.) 2. முடித்த கூந்தலை அவிழ்த்து நெகிழ விடுதல். "விரித்த கருங்குழலும்" (சிலப். 20, வெண்பா 3) 3. பரப்புதல். "பல்கதிர் விரித்தே" (புறநா. 8). "வான்கோழி......தானுந்தன் பொல்லாச் சிறகைவிரித் தாடி னாற் போலுமே" (மூதுரை, 14). 4. ஒரு சொல்லிடை ஓர் எழுத்தை மிகுத்தல். "விரிக்கும் வழி விரித்தலும்" (தொல். எச்ச. 7). 5. சுருக்கிக் கூறியதைப் பெருக்கிக் கூறுதல். "தொகுத்தல் விரித்தல்" (தொல். மர. 98). 6. விளக்கிச் சொல்லுதல். "நூல் விரித்துக் காட்டினும்" (நாலடி. 341).

விரி=1. விரித்தல். "தொகைவகை விரியிற் றருகென" (நன். சிறப்புப்.). 2. விரிப்பு. 3. பொதி மாட்டின் மேலிடும்

மெத்தைப்பை. 4. திரை, விரியை யவிழ்த்துவிடு. 5. விரிந்த அளவு. "சார்பெழுத் துறுவிரி" (நன். 60). 6. பரப்பு.

விரிசல்=1. பிளவு. 2. அலை. சலங்கு விரிசலில் அகப் பட்டது. (W). 3. தென்னோலைத் தட்டி வகை. (தஞ்.)

விரிப்பு=1. பிளப்பு. (W). 2. விரிக்கை. 3. விரிக்கும் கம்பளம் முதலியன. 4. மலர்த்துகை.

விரியல்=1. மலர்ச்சி. "தாழை விரியல் வெண்டோட்டுக் கோதை" (சிலப். 2 : 17). 2. பூமாலை. "விளங்குகதிர்த் தொடுத்த விரியல் சூட்டி" (சிலப். 10 : 133). 3. ஒளி. (சூடா). 4. பரப்பு. (பிங்.). 5. தென்னோலைத் தட்டி. விரியல் - விரியலை.

விரிவு = 1. பிளவு. சுவர் விரிவு கண்டிருக்கிறது. 2. பரப்பு.

விரிவுரை=1. நூலின் விரிவான வுரை (விருத்தியுரை). 2. சொற்பொழிவு. (இக்கா.).

விரிவுரையாளர்=பேராசிரியர்க்குக் கீழ்ப்பட்ட ஆசிரியர் (Lecturer). (இக்கா.)

விர்—விரு=நிலவெடிப்பு. விரு—விருவு.

விருப்பிளத்தல்=நிலம் வெடித்தல்.

விரி—விரல்=அகங்கை பிளந்து விரிந்தாற் போன்ற வுறுப்பு.

விர்—விறு—வீறு. வீறுதல்=1. பிளத்தல், கீறுதல். "தின் மெய்க்கட் குதிரையோ வீறியது" (கலித். 96). 2. வெட்டுதல். "தெய்வவாள் வீறப் பொன்றினன்" (கம்பரா. சம்பா. 43). 3. அடித்தல். அவனை நன்றாய் வீறினேன். (இ. வ.)

வீறு=1. வேறு. "வீறு வீறியங்கும்" (புறநா. 173). 2. தனிமை. (W). 3. வெறுப்பு. (யாழ். அக.). 4. அடி. நாலு வீறு வீறினேன்.

வீறு—வீறல்=வெடிப்பு.

வீறு—வீற்று=(பெ) 1. வேறுபடுகை. (பிங்.). 2. துண்டு. "வீற்று வீற்றாகி யோடி விழுதலும்" (கம்பரா. கும்பக. 187). 3. கூறு. "தந்தை தன்னைய ராயிரு வீற்றும்" (இறை. 28). 4. பக்கம். "இருவீற்று முரித்தே சுட்டுங் காலை" (தொல். பொருளியல், 26). 5., தனிமை. (W.)

வீற்று (கு. வி. எ.)=வேருக, வேறுபட்ட பகைவரால். "வீற்றுக் கொளப்படா" (தொல். பொருளியல், 27).

வீற்றுப் பொருள்=சில்லறைப் பண்டம். (W.)

வீற்றும் (கு. வி. எ.)=மற்றும், வேறும். "வீற்று மாயிரம் வெங்கணை யுந்தினுன்" (கந்தபு. சிங்கமு. 402).

வீற்று வீற்று=வெவ்வேருக. "வெளிற்றுப்பனந் துணியின் வீற்று வீற்றுக் கிடப்ப" (புறநா. 35).

வீற்று வீற்ருக=வெவ்வேருக.

வீற்று—வீற்றம்=வேறுபடுகை. (W.)

விறு—வெறு. வெறுத்தல்=1. பற்றுவிடுதல். "வெறுத்தார் பிறப்பறுப்பாய் நீயே" (தேவா. 310 : 10). 2. பகைத்தல், அருவருத்தல். "வெறுமின் வினைதீயார் கேண்மை" (நாலடி. 172). 3. துன்ப முறுதல். "எதிரே வருமே சுரமே வெறுப்பவோ ரேந்த லோடே" (திருக்கோ. 243, உரை).

வெறுக்கை=பகைக்கை, அருவருக்கை.

வெறுப்பு=பகைப்பு, அருவருப்பு.

வெறு—வேறு=1. பிரிந்தது. 2. பிறிது. 3. கூறுபாடு. "இருவேறுலகத் தியற்கை" (குறள். 374). 4. பகைமை. (சீவக. 755). 5. எதிரானது, நேர்மாருனது. 6. தீங்கு. "அறிந்தேதோ வில்லை நீவே ரோர்ப்பது" (கலித். 95). 7. புதியது. "யாம்வேறியைந்த குறும்பூழ்ப் போர் கண்டேம்" (கலித். 95). 8. தனி. (சீவக. 1872).

வேறு—வேற்று=(பெ.) அயலாள். விருந்து வேற்று வந்தாற் சமைக்க ஆள்வேண்டும்.

வேற்று (கு. பெ. எ.) =1. வேருன. 2. அயலான. 4. மாருன, பகையான.

வேறு—வேற்றுமை=1. வேறுபாடு. "வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்" (நாலடி. 75). 2. மாறுபாடு. "காமம் புகர்பட வேற்றுமைக் கொண்டு பொருள்வயிற் போகுவாய்" (கலித். 12). 3. ஒப்புமையின்மை. 4. ஒரு பொருளின் வேறுபாடு காட்டற்குரிய தன்மை. 5. (இலக்.) பெயரின் இயல்பான எழுவாய்ப் பொருள் செயப்படு பொருள் முதலியனவாக வேறுபடும் நிலைமை.

"எற்கு மெவ்வகைப் பெயர்க்கும்வே றுப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை." (நன். 291)

6. வேற்றுமை யணி. (தண்டி. 49).

வேறு—வேற்றவன் = 1. அயலான். "வேற்றவர்க் கெட்டா யோகர்" (சேதுபு. தோத். 43). 2. பகைவன். "வேற்றவ ரார்த்தனர்" (கம்பரா. இராவணன் வதை. 78).

வேற்றுள் = அயலான—வன்—வள். "வேற்று ளென்ன வொண்ணுதபடி" (ஈடு, 5 : 10 : 2).

வேற்றுன் = 1. அயலான். "வேற்றுர்க டிறத்திவன் றஞ்சமென் வீரவென்றுன்" (கம்பரா. வாலிவ. 33). 2. பகைவன். "வேற்றுரை வேற்றுர் தொழுத விளிவரவு" (பரிபா. 20 : 71).

வேறு—வேற்று (கு. பெ. எ.) = 1. வேறுன. எ - டு: வேற்றிசை, வேற்றுத்தளே, வேற்றுநிலை மெய்ம் மயக்கம், வேற்றுப் பொருள் வைப்பு. 2. அயலான. எ - டு: வேற்றுக் குரல், வேற்றுத்தாய், வேற்றுள், வேற்றுமுகம். 3. மாறுன, பகையான, எ - டு: வேற்றரசு, வேற்றுமுனே.

வேற்றுநர் = மாறு கோலங் கொண்டவர். "நூற்றுவர் முற்றி வேற்றுந ராகென" (பெருங். மகத. 1 : 94).

வேற்றுவன் = அயலான். "வேற்றுவ ரில்லா நுமருர்க்கே செல்லினும்" (சீவக. 1550).

விள்—விய்—வியல் = (பெ.) 1. அகலம், விரிவு, பரப்பு. "வியலென் கிளவி யகலப் பொருட்டே" (தொல். உரி. 66). 2. பெருமை. "மூழ்த்திறுத்த வியன்றுனே" (பதிற்றுப். 33: 5). 3. மிகுதி. (சிலப். 5 : 7, உரை). 4. பொன். (சங். அக.). 5. மரத்தட்டு. (அக. நி.). 6. காடு (பிங்.). 7. பலதிறப் படுகை. "வியன்கல விருக்கையும்" (சிலப். 5 : 7).

வியல் (கு. பெ. எ.) = அகன்ற, பரந்த. "விழவு வீற்றிருந்த வியலு ளாங்கண்" (பதிற்றுப். 56 : 1). "இருநீர் வியனுலகம் வன்சொலா லென்றும் மகிழாதே" (நன்னெறி, 18).

வியல்—வியலிகை = பெருமை. (யாழ். அக.)

வியல்—வியலம்—வியாழம் = 1. ஒரு பெருங்கோள். "முந்நீரைத் திரையிடை வியாழந் தோன்ற" (சீவக. 2467). 2. வியாழக்கிழமை. "திருத்தகு வியாழத்தின் மிக்க சம்பத்தினெடு சிறுவரைப் பெற்றெடுப்பாள்" (அறப். சத. 69).

வியாழம்—வியாழன்.

கோள்களுள் வியாழன் பெரிதாயிருப்பதும், வடமொழியில் அது பிருகஸ்பதி என்று பெயர் பெற்றிருப்பதும், கவனிக்கத் தக்கன.

பொன் என்பது வியாழனுக்கொரு பெயராதலால், வியல் என்னுஞ் சொல்லிற்குப் பொன்னென்னும் பொருளும் தோன்றிற்றுப் போலும்!

வியல்—வியன்=1. அகலம். (W.) 2. பெருமை. (திவா.). 3. சிறப்பு. (ஈடு, 8 : 10 : 1) 4. வியப்பு. (ஈடு, 8 : 10)

வியன் (கு. பெ. எ.)=அகன்ற, பரந்த.

வியனிடை=பரந்த வெளி, விசும்பு, வானம். "வியனிடை முழுவது கெட" (தேவா. 833 : 7)

வியலகம், வியலிடம் என்பன பரந்த ஞாலத்தைக் குறித்தாற் போன்று, வியனிடை என்பது பரந்த வெளியாகிய வானத்தைக் குறித்தது இடைவெளி.

விடுதல்=(செ. கு. வி.) 1. பிளத்தல். வெடியதிர்ச்சியில் சுவர் விட்டுப்போயிற்று. 2. விள்ளுதல், திறத்தல். (இலக். அக.). 3. கட்டவிழ்தல். "தளைவிட்ட தாமரை" (கலித். 77). 4. மலர்தல். "தாது பொதி போதுவிட" (தேவா. 1157 : 6). 5. பிரிதல், குலைதல், தளர்தல். கட்டு விட்டு விட்டது. 6. நீங்குதல், சட்டி சுட்டது; கை விட்டது, "விட்டது ஆசை விளாம்பழத் தோட்டோடே." (பழ.) 7. தவிர்தல். மழை விட்டும் தூவானம் விடவில்லை, "அந்திமழை அழுதாலும் விடாது." (பழ.) 10. விலகுதல். மூட்டுவிட்டுப் போயிற்று. 11. தங்குதல். "காவினு ணயந்து விட்டார்களே" (சீவக. 1905). 12. வெளிவருதல். ஓர் இலக்கு விட்டிருக்கிறது.

(செ. குன்றா வி.) 1. பிதிர் விள்ளுதல். ஒரு விடுகதை போடு. 2. வெளிப்படுத்துதல். மனத்திலிருக்கிறதை விட்டுச் சொல். 3. சொல்லுதல். "வேலை கடப்பன் மீள மிடுக்கின்றென விட்டான்" (கம்பரா. மகேந்திர. 4). 4. பிடி நெகிழச் செய்தல். பணப்பையை எங்கேயோ விட்டுவிட்டான். 5. இடத்தினின்று நீங்குதல். ஊரை விட்டுவிட்டான். (விரும்பி நீங்குதல்), கோட்டையை விட்டுவிட்டான் (அஞ்சி நீங்குதல்), பெட்டியை விடுதியில் விட்டுவிட்டான் (ஒன்றை மறந்து நீங்குதல்). 6. விலகுதல். அவன் சென்ற ஆண்டே பள்ளியை விட்டுவிட்டான். 7. நீக்குதல். சம்பளம் போதாதென்று

வேலையை விட்டுவிட்டான். 8. கைவிடுதல். அவன் புது மணஞ் செய்தவுடன் பழைய மனைவியை விட்டுவிட்டான். 9. நிறுத்துதல். வண்டியை விட்ட இடத்திலிருந்து ஓட்டி வந்தான். 10. விடுதலை செய்தல். அரசரின் முடிசூட்டு விழாவன்று சிறையாளியரை யெல்லாம் விட்டுவிட்டனர். 11. விடுமுறையளித்தல். வேனிற்காலத்திற் கல்வி நிலையங்கட்கெல்லாம் விடு முறை விடப் படும். 12. இசைதல். காசு கொடுத்தபின் ஏவலன் உள்ளே போக விட்டான். 13. பிறருக்காக இழத்தல். பொது நலத்திற் காகத் தன்னலத்தை விட்டுக்கொடுத்தல் வேண்டும். 14. அனுப்புதல். "தவமுது மகனை விட்டு" (குறள். 501, உரை). 15. ஏவுதல். நாயை விட்டுக் கடிக்கச் செய்தான். 16. செலுத்துதல், எய்தல். "எம்மம்பு கடிவிடுதும்" (புறநா. 9). 17. அடித்தல். கன்னத்தில் விட்டான் இரண்டு. 18. வினைக் கமர்த்தல். தண்ணீருக்கென்று நாலாளை விட்டிருக்கிறார்கள். "காடுகெட ஆடுவிடு" (பழ) 19. அமைத்தல். வீட்டிற்கு நாற்புறமும் வாசல் விட்டுக் கட்டியிருக்கின்றனர். 20. ஒளி வீசுதல். பட்டைதீர்ந்த கல் நன்றாய் ஒளிவிடும். 21. புகுத்துதல். பாம்புப்புற்றிற்குள் கையை விட்டான். 22. இடையில் ஏடு தள்ளுதல். கள்ளேடு விட்டுப் படிக்கிறான். 23. இடையில் இடம் விடுதல். ஒற்றை யிடைவிட்டுத் தட்டச்சடித்தல் வேண்டும். 24. பொறுத்தல். கீரையை வளரவிட்டு அறுத்தல் வேண்டும், கொதிக்கின்ற நீரை ஆறவிட்டுக் குடித்தல் வேண்டும். 25. ஒழித்தல். குடியை விட்டுவிடு. 26. ஒதுக்குதல். புதிய நகரமைப்பிற் கல்விச்சாலைக்குப் போதிய நிலம் விடப்பட்டிருக்கிறது.

வினை முடிவுணர்த்தும் துணைவினை: எழுதி விட்டான்.

க. பிடு (b), வ. பித் (bhid).

விடுத்தல் = (செ. குன்றுவி.) 1. நெகிழ்த்தல். 2. பிரித்தல். "புரைவிடுத்துரைமோ" (சீவக. 1732).

"உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்த லொன்றே".

3. பிதிர்விள்ளுதல். 4. வெளிவிடுதல். "பெருங்காற்று விடுத்த" (கல்லா. கணபதி.) 5. சொல்லுதல். "செல்கென விடுத்தன்று" (பு. வெ. 12 : 19). 6 விடைதருதல். "வினவவை விடுத்தல்" (நன். 40.) 7. பற்று விடுவித்தல். "பூவலர் கொடியனாரை விடுக்கிய கோயில் புக்கான்" (சீவக. 2917). 8. அனுப்புதல். "போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்" (தொல். அகத். ௩௯). 7. எய்தல். "ஒருட விரண்டு கூறுபட

விடுத்த.........வேலோய்'' (கல்லா. முருகன்றுதி). 10. போக விடுதல். ''உயிர் விடுத்தலின்'' (கல்லா. கணபதி).

(செ. கு. வி.) 1. விட்டுச் செல்லுதல். ''விடுத்தேன் வாழிய குருசில்'' (புறநா. 210). 2. தங்குதல். ''விடுத்தான் விடுத்தற் கிடங்கூறி'' (திருவாலவா. 54 : 5).

விடு—விடர் = 1. நிலப்பிளப்பு. ''கூரெரி விடர்முகை யடுக்கம் பாய்தலின்'' (அகநா. 47 : 6). 2. மலைப்பிளப்பு. ''நெடுவரை யருவிடர்'' (புறநா. 135) 3. மலைக்குகை. ''பெரு மலை விடரகத்து'' (புறநா. 37). 4. முனிவரிருப்பிடம். (சூடா)

விடர்—விடர்வு = நிலப்பிளப்பு.

விடர்—விடரகம் = 1. மலைக்குகை. ''விடரக முகந்து'' (மதுரைக். 308). 2. மலை. ''விடரக நீயொன்று பாடித்தை'' (கலித். 40). 3. பூனை (பகலிற் கண் பிளவுள்ளது).

விடர்—விடரவன் = (பகலிற் கண் பிளவுள்ள) பூனை. (யாழ். அக.)

விடர்—விடரளை = மலைப்பிளப்பிடம். ''நறும்பழ மிருங்கல் விடரளை வீழ்ந்தென'' (ஐங்குறு. 214).

விடரகம்—விடருகம் (நாமதீப.) பூனை.

விடருகம்—விடருகம்.

விடரகம்—விடாரகம் (பூனை)—வ. விடாரக.

விடாரகம்—விடாலகம் = பூனை. (சூடா.)

விடாலகம்—விடாலம் = பூனை. (சங். அக.)

விடாலம்—வ. வைடால = பூனை.

விடாலம்—விடாரம் = பூனை. விடாரம்—வ. வைடூர்ய = பூனைக்கண் போன்ற ஒளிக்கல், பூனைக்கண்; cat's eye. an opalescent gem.

மாக்கசு முல்லர் (Max Muller) எழுதிய 'India, What can it teach us?' என்னும் பொத்தகத்தின் இறுதியிலுள்ள 'On the name of the cat and the cat's eye' என்னும் குறிப்புரையைப் பார்க்க. (பக். 261—270)

(தொடரும்)

இக் கட்டுரை அடுத்த இதழில் முடியும். அதன் பின்னர், முந்தின இதழில் ஆசிரியர் குறித்தவாறு, 'தமிழின் தலைமையை நாட்டும் தனிச் சொற்கள்' என்னும் கட்டுரைத்தொடர் தொடங்கும்.

ஞா. தே.

சங்க இலக்கியத்தில் மணிகள்

[திரு. பி. எல். சாமி, பி.எசி.]

(பரல் ௬0 பக்கம் ௫௦௭ இன் தொடர்ச்சி)

சங்க காலத்தில் தமிழ்நாட்டுச் செய்திகளை எழுதின கிரேக்க, உரோம ஆசிரியர்கள் முசிறி, காவிரிப் பூம்பட்டினம், உறையூர் ஆகிய ஊர்களில் முத்து சிறப்பாக விற்கப்பட்டதைக் கூறியுள்ளனர். 'பந்தர் பயந்த பயங்கெழு முத்தம்' என்பது பந்தரில் ஏற்றுமதியான முத்தம் என்று கருதப்பட வேண்டும். தவிர, பந்தர் என்ற முசிறித் துறைமுகத்தில் விளைந்த முத்து என்று கருதுவதற்குச் சான்று இல்லை. சங்ககாலத்தில் கொற்கையிலும் அதையொட்டி இருந்த கடற்கரையிலும் ஈழநாட்டுக் கடற்கரையிலுமே முத்து விளைந்தது என்பது கிரேக்க, உரோம ஆசிரியர்களின் செய்திகளிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது.

அர்த்த சாத்திரத்தில் சௌர்ணேயம் என்று கூறிய முத்து பெரியாருகிய சூர்ணியாறு என்ற பெயரால் வந்தது என்று அறிஞர் மு. இராகவையங்காரும் அவரைப் பின்பற்றி மயிலை சீனி வேங்கடசாமி அவர்களும் எழுதினுர்கள். ஆனல், வரலாற்றுப்படியோ, அறிவியல் படியோ சேர நாட்டின் கடற்கரையில் முத்து விளையவில்லை என்பது முக்கியமான செய்தியாகும். சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் பாண்டிய நாட்டில் விளைந்த முத்தும், சோழ அரசாட்சிக்கு உட்பட்ட 'பாக்' சலசந்தியில் விளைந்த முத்தும் ஏற்றுமதியாக்கப்பட்டன என்பது மேல்நாட்டு அறிஞர்களின் நூல்களிலிருந்து தெரிகின்றது. சூர்ணியாறு என்ற பேர்யாற்றின் பெயர், அகநானூற்றில் வழங்கிய 'சுள்ளியம் பேர்யாறு' என்ற பெயரின் மொழிபெயர்ப்பு என்று அறிஞர் மு. இராகவையங்கார் கூறியுள்ளது மிகவும் பொருத்தமானதாகும்.

"......................சேரலர்
சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க" —அகம் (146)

சுள்ளி என்ற தமிழ்ச்சொல்லே சூர்ணி என்று வடமொழியில் மாற்றப்பட்டுப் பின்னர் சௌர்ணேயம் என்றும் கௌர்ணேயம் என்றும் மாறிற்று என்று சீனி வேங்கடசாமி அவர்கள் கூறுவர். பேரியாறு என்ற பெயர் பிற ஆறுகளுக்கும் இருந்ததால் முசிறியில் கலந்த பேரியாற்றைச் சுள்ளியம் பேரியாறு என்று சங்க காலத்தில் அழைத்தனர். மகாநதி என்ற ஆறு வடநாட்டில்

உள்ளது. ஆனால், இந்த ஆற்றின் பெயர் பெரியாறு என்ற பெயரின் வடமொழி பெயர்ப்பே அன்றி வேறன்று. பெரிய ஆறுகளைப் பெரியாறு என்பது ஆரியர்க்கு முற்பட்ட பெயர் வழங்கும் மரபாகக் கருத வேண்டும். அதுபோன்றே சிறிய ஆறுகளைச் சிற்றாறு என்று வழங்கும் மரபையும் காணலாம். ஆந்திர நாட்டில் ஓடும் கிருஷ்ண நதி தெலுங்குக் கல்வெட்டு களில் பேரேறு (Pereru) என்றும், தமிழ்க் கல்வெட்டுகளில் பேராறு என்றும் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். பேராறு என்று கூறும் வழக்கு சங்ககாலத்தில் வேறு ஆறுகளுக்கும் இருந்திருக்கும். பிற பேராறுகளில் இருந்து முசிறியில் கலந்த பேராற்றைப் பிரித்துக் காட்டவே சுள்ளியம் பேர்யாறு என்று அழைத்தனர். சுள்ளி என்பதை சூர்ணி என்று மொழிபெயர்த் தனர் என்பது பொருத்தமேயாகும். சுள்ளி என்பது ஒருவகை முட்செடி. மலையாளத்தில் இப் பெயர் வழங்குகின்றது. இந்தச் செடி ஆற்றங்கரையில் மண்டிக் கிடந்ததால் சுள்ளியம் பேர்யாறு என்ற பெயர் பெற்றது. அதுபோன்றே பிற்காலத்தில் மலை யாளத்தில் பெரியாறு என்பதைப் பூர்ணவாகினி என்று மொழி பெயர்த்தனர். முசிறியில் முத்து விளைந்ததற்குச் சான்றுகள் இல்லை. ஆதலின் முசிறியில் ஏற்றுமதியான முத்தையே சுள்ளி யாற்றின் பெயரால் சௌர்ணேயம் என்று அழைத்தனர். ஆனால், இந்த முத்துகள் பாண்டி நாட்டிலிருந்தும் சோழநாட் டிலிருந்தும் தரைவழியாக வந்தவை. முசிறி வழியாக ஏற்றுமதி யானவை. முசிறியில் மிளகு மிகுதியாக ஏற்றுமதியானதால் மிளகை 'மரீசி' என்று முசிறியின் பெயரால் அழைத்ததை இராக வையங்கார் குறிப்பிட்டுள்ளார். அதுபோன்றே சுள்ளியாறு கலக்கும் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியான முத்தை 'சௌர் ணேயம்' என்று அழைத்தனர். சங்ககாலத்திலேயே முசிறி என்ற பெயரின் மாற்றமான மரீசி என்ற மிளகுப் பெயர் வணிகப் பெயராக (Trade name) மாறிவிட்டது. அதனாலே இந்த வணிகப் பெயர் சங்கத் தமிழிலும் வழங்கியுள்ளதைக் கவனிக்க வேண்டும்.

"சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து."

பெரிய பலாப்பழத்தைப் போன்ற மூட்டைகளில் மிரியல் (மிளகு) பாரத்தைக் கழுதைகள் தாங்கிக்கொண்டு சென்ற சாத்து என்று பட்டினப்பாலை கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். மிளகு சென்ற பெரு வழிகளில் சுங்கவரி விதிக்கப் பட்டிருந்தது. வரியை ஏய்க்கக் கவர்த்த வழிகளில் சென்றாலும் காவலர் காத்து வரியை வாங்கினர் என்று கூறியதைக் கவனிக்க வேண்டும். வடமொழி

வணிகப் பெயரான மரீசி என்பதே மிரியல் என்று சங்கத் தமிழில் வழங்கியுள்ளது. ஏற்றுமதி, இறக்குமதியாகும் ஊரின் பெயரால் வணிகப் பொருள்களை அழைப்பது ஒரு வழக்கமாகும். முந்திரிக் கொட்டையைப் போர்த்துகீசியர் முதலில் கொல்லத்தின் வழியாக இந்தியாவிற்கு இறக்குமதி செய்ததினால் 'கொல்லம் அண்டி' என்று மலையாளத்தில் அழைத்தனர். பச்சை மிளகாய் வெளிநாட்டிலிருந்து போர்த்துகீசியர்களால் கொல்லத்தின் வழியாக இறக்குமதி செய்யப்பட்டது. அதனால் 'கொல்லம் மிளகு' என்று அழைக்கப் பட்டது. தமிழ்நாட்டு மிளகிற்கு மாற்றாக இந்தக் காயைப் பயன்படுத்தியதால் தமிழில் மிளகாய் என்று அழைக்கப்பட்டது. அதுபோன்றே சுள்ளியாறு வழியாக முசிறித் துறைமுகத்தில் ஏற்றுமதியான முத்து சௌர்ணேயம் (கௌர்ணேயம்) என்றழைக்கப்பட்டது என்று கொள்வதே பொருத்தமாகும். தாலமி என்ற உரோம ஆசிரியர் தமிழ் நாட்டில் சூசிக்கரையில் முத்து கிடைத்ததாகக் கூறியுள்ளார். அந்த சூசிக்கரையைத் தூத்துக்குடி என்று கருதுவர்.

திருவிளையாடற் புராணத்திலும் கல்லாடத்திலும் சோழர் காலக் கல்வெட்டுகளிலும் முத்தின் குணங்களும் குற்றங்களும் கூறப்பட்டுள்ளன. முத்து பிறக்கும் இடங்களாகச் சங்கு, மூங்கில், யானைத் தந்தம், பன்றிக் கொம்பு, பாம்பின் தலை, கொக்கின் கழுத்து, கமுகு போன்ற இருபது இடங்கள் கூறப் பட்டுள்ளன. ஆனால் அவை எல்லாம் வெறும் புராணச் செய்திகளேயாகும். கரும்பில் முத்து விளைவதாகக் கூறுவதும் உண்மைச் செய்தியன்று. சங்கில் முத்து விளைவது உண்டு. மற்றவை உண்மையற்ற கற்பனைச் செய்திகளாகும். யானைத் தந்தத்தில் முத்து விளைவதாகக் கூறினதற்கு ஒரு காரணம் உண்டு. 'முத்து பட முற்றிய உயர் மருப்பு (புறம், 161) என்றும், 'வெண்கோடு பயந்த ஒளிதிகழ் முத்தம்' (புறம். 170) என்றும் புறநானூறு கூறியுள்ளது. "முத்துடை மருப்பின் மழகளிறு பிளிற" (பதிற்று. 32), "பெருங்களிற்று முத்துடை வான்கோடு" (முருகு), "யானை முத்தார் மருப்பு" (குறிஞ்சி, 35), "யானை முத்துடை மருப்பின்" (மலைபடு. 517) என்று சங்க நூல்கள் கூறியுள்ளன. "வேழத்தின் வெண்மருப்பினைக் கீழ்ந்து சிங்கங் குருகுண்ண முத்துதிரும்" (250-9) என்று சம்பந்தர் கூறியுள்ளார். இயற்கையில் யானை வாழும் சூழலில் சிங்கம் வாழ்வதில்லை. ஆதலின் இது கற்பனைச் செய்தியே. சில யானைத் தந்தங்களில் அரிதாக உருண்டையாக உள்ளே முண்டு இருப்பதுண்டு. யானைத் தந்தத்தை வெட்டுவோர் இந்த உருண்டையை முத்து என்று கருதினர். யானையின் தந்தம்

பொதுவாக வாழைத் தண்டுபோல உரிஉரியாக இணைந்திருக்கும். அரிதாக உள்ளே கெட்டியாக உருண்டையாக இருப்பதை முத்து என்று கொண்டனர். இந்த முத்து அவ்வளவு சிறந்த தன்றுதலால் விறலியர்க்கு அரசன் பரிசிலாகக் கொடுத்ததாகப் புறநானூறு கூறியுள்ளது. பழங்காலத்திலேயே தந்தத்தையும் விலையுயர்ந்த மணிபோலவே மதித்துள்ளனர். இதுபோன்று பன்றிக் கொம்பின் தந்தத்திலும் இருக்கலாம். அதனுல் பிற்காலத்தில் பன்றிக் கொம்பிலும் முத்து பிறந்ததாகக் கூறினர். மூங்கிலில் முத்து பிறந்ததாகக் கூறினதற்கும் ஒரு விளக்கம் காணப்படுகின்றது. மூங்கிலில் அரிதாகக் கல் போன்றதொரு பொருள் (Tabashir) கிடைக்கின்றது. இது கெட்டியான வெண் மணல் போலத் தோன்றுகின்றது. இதையே மூங்கில் முத்து என்று கருதினர். இதைச் சிறந்த மருந்தாகவும் கிழக்கு ஆசியாவில் கருதுவர். ஆனுல், இதுவும் உண்மையான முத்து இல்லை. கரும்பு முதலிய பிற பொருள்களில் இருந்து முத்து உண்டாகும் என்பதெல்லாம் வெறும் கற்பனைச் செய்தியே யாகும். அவற்றைப் பிற்கால வடமொழிப் புராணங்களிலிருந்து தமிழில் புகுந்தன எனலாம். சங்ககாலத்திலேயே 'மிசைப் பெய்த நீர் கடற்பரந்து முத்தாகுந்து' என்று புறநானூறு (380) கூறியுள்ளது. மழைத்துளி வாய் திறந்த சிப்பியில் விழுந்து முத்தாகும் என்ற கருத்து தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றது. பிளினி என்ற ஆசிரியரும் இந்தக் கருத்தை எழுதி யிருப்பதால் தமிழ்நாட்டிலிருந்தே இக் கருத்தைப் பெற்றிருப்பார்.

சோழர் காலத்துக் கல்வெட்டுகளில் வட்டம், அனுவட்டம், ஒப்புமுத்து, குறுமுத்து, நிம்போளம், பயிட்டம், அம்புமுது, கரடு, இரட்டை, சப்பத்தி, சக்கத்து, குளிர்ந்த நீர், சிவந்த நீர் என்று பல முத்து வகைகள் கூறப்பட்டுள்ளன. குறுமுத்து என்பது தற்காலத்தில் Seed pearls என்று சொல்லப்படுவ தாகும். நல்ல உருண்டையான முத்து வட்டம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இந்த முத்துகள் முத்துச் சிப்பியின் ஓட்டோடு ஒட்டியில்லாது சதையில் பதிந்திருக்கும் என்பர். கரடு என்பது warty pearl எனப்படுவதாகும். இதை முத்து வணிகர்கள் coqde perie என்றழைப்பர். பொதுவாக வட்டமில்லாத முத்துகளை barrok pearls என்றழைப்பர். இந்த வகைகளைச் சேர்ந்த வற்றையும் சோழர் காலத்துக் கல்வெட்டு வகைப்படுத்திக் கூறி யிருப்பதாகக் கருதலாம். ஆனுல், அவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளப் போதிய சான்றுகள் இன்று இல்லை. சோழர் கல்வெட்டுகளில் கூறிய முத்துகளில் வட்டம் என்ற முத்தும்

குளிர்ந்த நீர் என்ற முத்தும் சங்க நூல்களிலேயே கூறப்பட்டுள்ளன என்று கருத இடமுண்டு.

"வெருகிருள் நோக்கி அன்ன கதிர்விடு
பொருகாழ் முத்தம் இடைமுலை விளங்க" —அகம். 73.

காட்டுப்பூனை இருளில் நோக்கும்போது கண் முழுவட்டமாக ஒளிரும் என்று கூறுவர். ஆதலின் இருளில் காட்டுப்பூனை நோக்கும்போது தோற்றும் கண் என்று கூறப்பட்டுள்ளது. முழுவட்டமான உயர்ந்த முத்தை ஒரு வடத்தில் அணிவதை உரோமரும் சிறப்பாகக் கருதினரென்று தெரிகின்றது. 'மாட வெண் புறவின் முட்டை வடிவெனத் திரண்ட பேழ் வாய் கோடு கொள் முத்தம் வெள்ளை நிறத்தன' என்று திருவிளையாடற் புராணம் கூறுவதைக் காணலாம். மாடப்புருவின் முட்டை போன்று நீண்ட வட்டவடிவமான முத்தையும் போற்றினர். 'இவர் திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்' (அகம், 130) என்று சங்க நூல் கூறுவதால் சோழர் காலத்து, குளிர்ந்த நீர் முத்து ஈர்ங் கதிர் முத்தம் என்று கூறப்பட்டிருப்பதாகக் கொள்ள வேண்டும். தூய வெள்ளையான வட்டவடிவ முத்து சந்திரகுரு என்றும், சிவந்த நீர் முத்து அங்காரகன் என்றும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. வெள்ளை முத்தை வெள்ளிக் கோளுடன் ஒப்பிட்டிருக்கலாம். முத்தின் குற்றமாகக் காற்றேறு, மணலேறு, கல்லேறு, நீர்நிலை யென்பன கூறப்பட்டுள்ளன. முழு வட்டமான முத்தையே ஆணி முத்து என்றும் கூறினர் என்று தெரிகின்றது. சங்ககாலத்திலேயே முத்தைத் துளையிடவும் மாலைகளாகச் செய்யவும் முத்தையே அணிகலனாக அணியவும் தெரிந்திருந்தனர். பிற்காலத்தில் கருமுத்து சிறப்பானதாகக் கருதப்பட்டது. கருமுத்தன், கருமுத்து என்ற பெயர்களைச் சூடிக்கொள்ளும் பழக்கம் வந்தது. கருமுத்து மெக்சிகோ வளைகுடாவில் மிகுதியாக விளைகிறது. கி. மு. 1700 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்திய வணிகர் 'ஊர்' (ur) என்ற சுமேரியர்களின் நகரத்திற்கு நகைகளையும் மீன்கண்கள் எனப்படும் முத்தையும் ஏற்றுமதி செய்தனர் என்று ஓர் ஆராய்ச்சியாளர் கூறுவார். (Ornaments and Jewellery in proto Historic India - M. Pezhard). இந்த முத்து தமிழ்நாட்டிலிருந்துதான் சென்றிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆதலின் தமிழ் நாட்டில் முத்தெடுக்கும் தொழில் கி. மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்க வேண்டும்.

முத்து என்ற பெயர் வடமொழியில் உள்ள 'முக்தா' என்ற சொல்லிலிருந்து வந்ததாக அறிஞர்கள் சிலர் கூறுவர். இந்தி

யாவில் தமிழ்நாட்டிலேதான் சிறந்த முத்து மிகுதியாகப் பண்டைக்காலந்தொட்டுக் கிடைத்தமையால் முத்து என்ற தமிழ்ப் பெயரையே வடமொழியாளர் பயன்படுத்தினர் என்று கொள்ள வேண்டும். நித்திலம் என்ற பெயரும் முத்திற்கு வழங்கியுள்ளது. மலையாளத்தில் இத்தில் என்ற பெயர் தட்டையான இரட்டையோட்டுக் கிளிஞ்சிலுக்கு வழங்குகின்றது. இத்தில்முள்ளன் என்ற பெயர் மலையாளத்தில் நலுங்கை (அழுங்கு) - அஃதாவது எறும்பு தின்னி என்ற விலங்கைக் குறிக்கும். இத்தில் கிளிஞ்சில் போன்ற அழுங்கின் முதுகில் முட்செதிள்கள் உள்ளதால் இத்தில்முள்ளன் என்றழைத்தனர். முற்றில் என்ற பெயர் சிறு முறம் போன்ற இரட்டையோட்டுக் கிளிஞ்சிலைக் குறிக்கின்றது. முரு (முறு) என்ற சொல் மலையாளத்தில் இரட்டையோட்டுக் கிளிஞ்சிலைக் குறித்து இன்றும் வழங்குகின்றது. இந்தப் பெயர்களையெல்லாம் கவனிக்கும் போது நித்திலம் என்ற பெயர் நித்தில் என்று இருந்திருக்க வேண்டும். அதுபோன்றே முத்து என்ற பெயரின் பழைய உருவம் முத்தில் என்று இருந்திருக்கலாம். முத்து, முத்தல், மொத்தை என்ற சொற்களின் அடிப்படைப் பொருள் உருண்டை, திரட்சி என்பதாகும். திரண்ட உருவை உடையதால் முத்தில், முத்து என்று பெயரிட்டழைத்திருக்கலாம். முற்றில் என்ற இரட்டைக் கிளிஞ்சிலின் பெயரே முத்தில், முத்து என்று மாறியும் இருக்கலாம். ஆனால், முத்து என்ற பெயர் வடமொழியிலிருந்து வந்ததாகச் சொல்வது வரலாற்று அறிவிற்கோ, அறிவியல் அறிவுக்கோ, பகுத்தறிவுக்கோ பொருத்தமற்றது என்று உறுதியாகக் கூறலாம். முத்தை நிகண்டுகளில் நித்திலம், சங்கீன்ற பிள்ளை, ஆழிவித்து என்றும் அழைத்தனர். இதில் சங்கீன்ற பிள்ளை என்பது வலம்புரி முத்தாகலாம்.

பின் இணைப்பு

1. இந்தியாவிலிருந்து வந்த பெரிய மணிகளில் இருந்து மதுவருந்தவும் உணவு உண்ணவும் கலங்கள் செய்ததைப் பற்றியும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்ததைப்பற்றியும் உரோம ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். (Common garnets are often found in large pieces and in India small dishes are carved out of them. The Romans must have traded in that for Pliny speaks of cups cut out of Lychnis and vessels out of Indian carbunculi). 'மணிக்கலத்தன்ன ஆயிதழ் நெய்தல்' என்று பதிற்றுப்பத்து (30-2) கூறுவதைக் காணலாம். மணி

யால் செய்த பாத்திரம் என்று கூறப்பட்டுள்ளது. 'நீல உண் மணிக் கோலக் குழிசி' என்று பெருங்கதை (2-6 வரி 68) கூறுவதிலிருந்து குடம்போன்ற பாத்திரத்தை நீலமணியில் செய்தனர் என்று தெரிகின்றது. ஆதலின் உரோம ஆசிரியர்கள் கூறியது உண்மையான செய்தியே என்பதைத் தமிழ்நூல்கள் காட்டுகின்றன.

2. சிறு விலை பெறு மணிகள் என்று திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. கரிய கம்பளத்தில் பதும ராகத்தையும் ஏனை எட்டுத் திசைகளில் எண்வகை இரத்தினங்களையும் வைத்தனர். நவமணி விற்போர் கம்பளத்தைப் பரப்பிக் கீழ்த்திசை நோக்கியிருத்தல் மரபு என்று கூறும் செய்திகள் அக்காலத்துப் பழக்கத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. மாணிக்கம், முத்து, வைரம், மரகதம், நீலம் இவை மேல் கூறும் மணிகள் நான்கு ஆயினும் அவை சிறிய விலையுள்ளன என்று திருவிளையாடற்புராண உரை கூறுவதைக் கவனிக்க வேண்டும். சிறுவிலைமணிக்கெதிராக 'அருவிலை நன்மணி'யும் செழுமணிக் காரர் குழுவினையும் பெருங்கதை கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். சிறுவிலை மணிகள், பெருவிலை மணிகள் என்று இரு வகையாக மணிகள் பகுத்துக் கூறப்பட்டன என்று தெரிகின்றது.

3. பளிங்கையும் மணியென்று கூறும் வழக்கம் இருந்தது. 'மணிக்கயம்' (பெருங்கதை 1-55 : 2) 'மணிமருள் தெண்ணீர்' (மலைபடுகடாம் 180) ஆகிய வரிகளில் மணி என்பது பளிங்கையே குறித்து வழங்கியது. தமிழ்நாட்டிலிருந்து மேலைநாட்டிற்குப் பளிங்கு ஏற்றுமதியாகியுள்ளதை உரோம ஆசிரியர்கள் கூறியுள்ளனர். (The trade in Indian crystal was an important one. Pliny speaks of an unequalled excellence of Indian rock-crystal glass and mostly from Ceylon.)

4. பந்தர் என்ற பெயர் ஒருவகை விலையுயர்ந்த கல்லிற்கும் வழங்கியுள்ளது என்று கருத இடமுண்டு. Pliny says that Pantarbes was the same stone as Jargoon. (Macrindle says that Panterbes may be a corruption of an Indian word.) பந்தர் என்ற இந்தியப் பெயரின் (தமிழ்ப் பெயரின்) மாற்று உருவமே என்று பிளினி கூறியது பொருத்தமாக உள்ளது. பந்தர் என்பதை அரபுச் சொல் என்று கொண்டால் சேர நாட்டுக் கடற்கரையில் இறக்குமதியான முத்தையே அது குறித்தது என்று கொள்ள வேண்டும். ஏனென்றால் கி. பி. முதல் நூற்றாண்டுக்கு முன்னரே பந்தர் அப்பாஸ், பந்தர் புசிர்

(Bundar Abbas, Bundar Busir) என்ற பாரசீக வளைகுடாவில் இருந்த துறைமுகங்கள் முத்து முதலிய வணிகப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் இடங்களாகச் சிறந்திருந்தன என்று வரலாற்று ஆசிரியர்கள் (Ornaments and Jewellery in prehistoric India—M. Pezhard) எழுதியுள்ளனர். பெர்சிய வளை குடாவிலும் தமிழ்நாட்டுக் கடற்கரையிலும் வட இலங்கைக் கடற் கரையிலும் விளைந்த முத்தைப் போலச் சிறந்த முத்து விளைந்த தாக கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க ஆசிரியர்கள் கூறியுள்ளனர். (The pearls of Bahrein fishery are said to be even finer than those or Ceylon and they form the best important trade of Basra. The shell of molluses which yield the Ceylon, Indian and Persian pearls are sometimes are as much as a foot in diameter and are usually about nine inches.) ஆதலின் சேரநாட்டுக் கடற்கரையில் இருந்த பந்தர் என்ற துறைமுகம் பாரசீக வளைகுடாவில் இருந்த துறைமுகத்தின் பெயரால் ஏற்பட்டிருக்கலாம். இங்கு பாரசீக வளைகுடாவில் விளைந்த சிறந்த முத்து இறக்குமதியாக்கப்பட்டிருக்கலாம். இதையே 'பந்தர் பயந்த பயங்கெழு முத்தம்' என்று பதிற்றுப் பத்து கூறியிருக்கலாம். சங்ககாலத்து நூல்களில் தமிழ்நாட்டி லிருந்து ஏற்றுமதியான பொருள்களே மிகுதியாகக் கூறப்பட் டுள்ளன. ஆனால், இறக்குமதியானவை கூறப்படவில்லை. அகழ்வு செய்து ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்ட உரோமரின் மணிக்கல் தொழிற்சாலை இருந்த அரிக்கமேடு சங்க நூல்களில் கூறப்படாதது கவனிக்கத்தக்கதாகும். அரிக்கமேட்டில் விலை குறைந்த கற்கள் பல இறக்குமதியாக்கப்பட்டு அணிகலன்க ளாக மாற்றப்பட்டன என்பது ஆராய்ச்சியில் தெரிகின்றது. ஆதலின் பெர்சிய வளைகுடாவிலிருந்த பந்தர் என்ற துறை முகத்திலிருந்து தமிழ்நாட்டிற்குச் சிறந்த முத்து இறக்குமதி யாகியிருக்கலாம் என்று தெரிகின்றது. அதன் காரணமாகவே பந்தர் என்ற அரபுச் சொல்லால் தமிழ்நாட்டுத் துறைமுகம் அழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இந்தக் கருத்தை எண் பிக்கப் போதிய சான்றுகள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க தாகும்.

5. "சீர்மிகு சிறப்பினோன் தொல்குடிக் குரித்தெனப் பார் வளர் முத்தமொடு படுகடல் பயந்த ஆர்கலி யுவகையர்" என்று கலித்தொகை (103) கூறுவதைக் கவனிக்க வேண்டும். பாண்டி யரின் சிறந்த பழைய குடிக்கு உரிய முத்தம் என்று கலித் தொகை கூறுவதைக் கவனிக்க வேண்டும். மிகப் பண்டைக் காலத்தேயே முத்து பாண்டியர்க்கு உரியதென்று கருதினர்

என்று கருதவேண்டும். இது மெகஸ்தனீஸ் கூறிய செய்தியி லிருந்து தெரிகின்றது.

6 'முதிர்வார் இப்பி முத்தம்' (புறம். 53), 'விளைந்த முதிர்ந்த விழு முத்து' (மதுரைக் காஞ்சி 135) என்று சங்க நூல்கள் கூறுவதால் முத்துச் சிப்பிகள் நன்கு வளர்ந்த பிறகே முத்துச்சிப்பிகளை வாரியெடுத்தனர் என்பது தெரிகின்றது. ஆதலின் சங்ககாலத்திலேயே சிப்பிகளின் முத்து முதிரும் காலத்தை நன்கு தெரிந்திருந்தனர் என்று தெரிகின்றது.

7. குருவிந்தக்கல் மாணிக்க வகையுள் ஒன்றென்பர். காவிக்கல் என்பாருமுளர் என்று கம்பராமாயண உரையில் கூறப்பட்டுள்ளது.

மேற்கோள் நூல்கள்

1. சங்கநூல்கள், திருவிளையாடற்புராணம், கல்லாடம், சோழர் காலத்துக் கல்வெட்டுகள், நவமணிகள் (வைத்திய நாதன்).

2. The Commerce between the Roman Empire and India—E. H. Warmington.

3. A History of Gem history in Ancient and Madieval times—M. S. Shukla.

4. Elephant—Ramesh Bedi.

5. Tabashir—Mariael of Indian Forest Botany—N. S. Bor - O.U.P.

6. Periplus of Erithyrean Sea.

7. Loan words evidence in Bibilical Hebrew—Chain Rabin—Proceedings of the Second World Conference of Tamil Studies.

குறிப்பு: திரு. பி. எல். சாமி அவர்கள் முன்னர்ச் செல்வியில் எழுதிய சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம், சங்க இலக்கியத் தில் விலங்கின விளக்கம், சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம் ஆகியன நூல்களாக வெளிவந்துள்ளன. சங்க இலக்கியத்தில் மீன்கள், சங்க இலக்கியத்தில் மணிகள் என்னும் கட்டுரைகள் விரைவில் நூலுருப்பெறும். இவ் ஆசிரியர் எழுதும் சங்க இலக்கியத்தில் 'ஆடை—அணிகலங்கள்' என்னும் கட்டுரை அடுத்து வெளிவரும்.

குடை நிலையா? கொடை நிலையா?

[அடிகளாசிரியர்,
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்]

"குடைநிலை வஞ்சியும் கொற்ற வஞ்சியும்
நெடுமா ராயம் நிலைஇய வஞ்சியும்
வென்றோர் விளங்கிய வியன்பெரு வஞ்சியும்
பின்றாச் சிறப்பின் பெருஞ்சோற்று வஞ்சியும்
குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்
வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன்
புட்கைச் சேனை பொலியச் சூட்டி
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்தென்
வாய்வாள் மலைந்த வஞ்சிசூ டுவமென."

மேற்கண்ட பகுதிக்கு "குடைநாட் கோளும் கொற்ற வஞ்சியும் நெடிய மாராயம் நிலைபெற்ற வஞ்சியும், வெற்றிகொண்டோர் விளங்கிய சிறந்த பெரு வஞ்சியும் தாழாச் சிறப்பினையுடைய பெருஞ்சோற்று வஞ்சியும், குறைவிலாப் பெருமையினையுடைய கொற்ற வள்ளையும் இடையே முரிதலில்லாத சிறந்த பனந் தோட்டோடு மேற்கோளையுடைய தானை விளங்கச் சூட்டி, அழகிய வஞ்சி நகரின் புறத்தே எனது பகைவரைப் பொருத வினை வாய்த்த வாளிற்கு வஞ்சிமாலை சூடுவேம்" என்று உரை எழுதப்பட்டுள்ளது. இப் பகுதிக்கு அடியார்க்கு நல்லார் உரையில்லை. பிற்காலத்துப் பலரும் இவ்வாறே உரை எழுதி வருகின்றனர், இங்கே ஆறு வஞ்சித்துறைகள் எண்ணப்பட்டுள்ளன. எண்ணி, அவற்றுக்குரிய வஞ்சியைப் பனந்தோட்டொடு கூட்டி, மாலை செய்து, சேனைக்குச் சூட்டி யாம் வஞ்சி சூடுதும் என்று முடிபு கொள்ளுமாறு இப் பகுதி அமைந்துள்ளது.

ஆசிரியர் இளங்கோவடிகள் இங்கே கூறிய வஞ்சித்திணையின் துறைப் பகுதிகளைத் தொல்காப்பியத்தைப் பின்பற்றிக் கூறியிருப்பாரா? அல்லது வெண்பாமாலையைப் பின்பற்றிக் கூறியிருப்பாரா என்று வினவின், சிலப்பதிகார காலத்தில் வெண்பாமாலையே எழவில்லையாதலின், அந் நூல்பற்றித் துறைப் பகுதிகளைத் தம் இலக்கியத்தில் அவர் கூறியிருக்க முடியாது. தொல்காப்பியத்தைப் பின்பற்றித்தான் வஞ்சித்துறைப் பகுதிகளை அவர் கூறியிருக்க வேண்டும். வஞ்சித்துறைகளைப் பற்றிக் கூறும் தொல்காப்பிய நூற்பாவினையும், வெண்பாமாலை நூற்பாவினையும் கீழே காண்க:

"இயங்குபடை யரவம் எரிபரந் தெடுத்தல்
வயங்க லெய்திய பெருமை யானும்
[1]கொடுத்த லெய்திய கொடைமை யானும்
[2]அடுத்தூர்ந் தட்ட கொற்றத் தானும்
[3]மாராயம் பெற்ற நெடுமொழி யானும்
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமை யானும்
[4]பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்
[5]வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்
[6]குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇ
கழிபெருஞ் சிறப்பின் துறைபதின் மூன்றே."

(தொல். புறத்திணை. 7)

"வாடா வஞ்சி வஞ்சி யரவம்
கூடார்ப் பிணிக்கும் குடைநிலை வாணிலை
கொற்றவை நிலையே கொற்ற வஞ்சி
குற்றமில் சிறப்பிற் கொற்ற வள்ளை
பேராண் வஞ்சி மாராய வஞ்சி
நெடுமொழி வஞ்சி முதுமொழி வஞ்சி
உழபுல வஞ்சி மழபுல வஞ்சி
கொடையின் வஞ்சி குறுவஞ் சியயே
ஒருதனி நிலையொடு தழிஞ்சி பாசறை
பெருவஞ் சியயே பெருஞ்சோற்று நிலையொடு
நல்லிசை வஞ்சியென நாட்டினர் தொகுத்த
எஞ்சாச் சீர்த்தி இருபத் தொன்றும்
வஞ்சியும் வஞ்சித் துறையு மாகும்."

(புறப்பொருள் வெண்பாமாலை - வஞ்சி)

சிலப்பதிகாரத்தைப் பேரறிஞர் பலர் ஆராய்ந்து அச்சிட்டுள்ளனர். பேரறிஞர் பலர் திறனாய்வு செய்து நூல்களும் வெளியிட்டுள்ளனர். இத்தகைய இலக்கியத்தில் பிழையொன்றும் இராதென்று எல்லோரும் கருதுவதியற்கை. ஆராய்ச்சியில் விருப்பம் உள்ள அறிஞர் மேற்காட்டிய தொல்காப்பிய வஞ்சித்திணை நூற்பாவையும், வெண்பாமாலை வஞ்சித்திணை நூற்பாவையும் படித்துப் பார்த்துவிட்டு, இளங்கோவடிகள் எந் நூலைப் பின்பற்றி இப் பகுதியைப் பாடியிருப்பார் என்பதை அறிய முயல வேண்டுகிறேன்.

தொல்காப்பியர் வஞ்சித்திணைக்குப் பதின்மூன்று துறைகள் கூறுகின்றார். வெண்பாமாலை இருபத்தொன்று கூறுகின்றது.

தொல்காப்பியத்தில் குடைநிலை, வாணிலை பேசப்பட வில்லை. இளங்கோவடிகள் தொல்காப்பியத்தைப் பின்பற்றி யவர் ஆதலால், குடைநிலை, வாணிலைகளை அவர் கூறியிருக்க மாட்டார். சிலப்பதிகாரத்தே குடைநிலை வஞ்சி என்று இப் பொழுது ஓதப்படும் பாடம் கொடைநிலை வஞ்சி என்றுதான் இருக்க வேண்டும். மேலும் வெண்பாமாலை 'கொடையின் வஞ்சி' என்று 'வஞ்சி' என்னும் சொல்லைக் கொடைக்குரியதாகக் கூறியிருப்பதையும், கூடார்ப் பிணிக்கும் குடைநிலை வாணிலை எனக் குடைநிலை வாணிலைக்கு வஞ்சி என்னும் சொல் கொடா மல் கூறியிருப்பதையும் கருதுக.

ஏடு எழுதுவோர் கொடைநிலை வஞ்சி என்பதைக் குடை நிலை வஞ்சி என்று எழுதியிருக்க வேண்டும். (உலக வழக்கில் கொடுத்தான் என்பதைக் குடுத்தான் என்றும் வழங்குகின் றனர்) உரை எழுதியவர் முதல் நூலாகிய தொல்காப்பியத் தைக் கருதாமல் புறப்பொருள் வெண்பாமாலையில் குடைநிலை, வாணிலை கூறப்பட்டிருத்தலால், குடைநிலை வஞ்சி என்பதைக் குடைநாட்கோள் என்று மிக எளிதாகப் பொருள் கூறிவிட் டனர். குடைநாட்கோளை அடுத்துக் கூறவேண்டிய வாணாட் கோள் அதை அடுத்து இல்லையாயினும் பல அடிகட்குப் பின் வேறு பொருளில் வந்துள்ள வாள் என்னும் சொல்லை எடுத் துக்கொண்டு, அதற்கு வாணாட்கோள் என்று பொருள் கூருமல், அவ் வாளை வஞ்சிமாநகரின் புறத்தே கொண்டுவந்து நிறுத்தி, செங்குட்டுவன் சூடவேண்டிய வஞ்சி மாலையைப் பிடுங்கி அவ் வாளுக்குச் சூட்டிவிட்டனர். உரையாசிரியர்கள் செய்யும் திருவிளையாடல்கள் பல ; அவற்றுள் ஒன்று இது.

சேரன் செங்குட்டுவன் கொடைநிலை வஞ்சி கொற்ற வஞ்சி நெடுமாராயம் நிலைஇய வஞ்சி, வென்ருேர் விளங்கிய வியன் பெரு வஞ்சி, பெருஞ்சோற்று வஞ்சி, கொற்ற வள்ளை என்னும் வஞ்சி ஆகியவற்றிற்குரிய வஞ்சியைத் தனது அடையாள மாலை யாகிய வெள்ளிய பனந்தோட்டுடன் கூட்டி, மாலை செய்து, அம் மாலையைத் தன் சேனைக்குப் பொலிவு வரச் சூட்டிப், பின்னர் வஞ்சிமாநகரின் புறத்தே என் வாய்ச்சொல் (வாய் வாள்) ஆகிய ஆணையை மேற்கொண்ட வஞ்சி மாலையை யானும் படைத் தலை வரும் சூடிக்கொள்வோம் என்று கூறுகின்ருன்.

இங்கே சூட்டி என்பது பிறவினை; சூடுதும் என்பது தன் வினை. உரைகாரர் கருதுமாறு வாளுக்கு வஞ்சி அணிதலாயின் சூட்டுதும் என்று பாடம் இருக்க வேண்டும்.

இளங்கோவடிகள் வஞ்சித்திணைப் பகுதிகளுள் முன்னே சேனைக்கு உரியதாகக் கூறப்படும் ஆறினை எண்ணி அவற்றிற் குரிய வஞ்சியைப் பனந்தோட்டுடன் கூட்டி மாலை செய்து அம் மாலையைச் சேனைக்குச் சூட்டியபின் மாற்றார் மண் கருதிப் போர் தொடங்க வேண்டும் என்று தன் வாய்ச் சொல்லாகிய ஆணையை மேற்கொண்ட வஞ்சி மாலையை வஞ்சிமாநகரின் புறத்தே படைத்தலைவரும் தானும் சூடிக்கொள்வோம் என்று செங்குட்டுவன் கூறியதாகப் பாடுகிறார்.

அடிகள் I குடைநிலை வஞ்சி முதலாக (141) பெருஞ் சோற்று வஞ்சி ஈறாக (144) தன் சேனைக்குச் சூட்டி (147) என்று கூட்டுவர் அரும்பத உரையாசிரியர்.

''வாய்வாள் ஆண்மையில் வண்டமி ழிகழ்ந்த
காவ நாவில் கனகனும் விசயனும்''

என்ற இடத்தே 'வாள்' என்னும் மொழி, 'சொல்' என்னும் பொருளில் வருமாறு அடிகள் கூறியுள்ளதையும் காணலாம். இங்கே 'வாய் வாள்' என்பது வெட்டும் வாளன்று. அது வாய்ச்சொல் என்று பொருள்படும். கனகவிசயர் வெட்டும் வாளாகிய கைவாள் ஆண்மையினாலே தமிழகத்தை இகழ்ந்து கூறாமல், வெறும் வாய்ச்சொல் (வாய்வாள்) ஆண்மையினாலே இகழ்ந்து கூறினர் என்று அடிகள் நயம்படக் கூறிய இப் பகுதி, படித்துப் படித்து இன்புறத்தக்கது. வாள் என்பது பொருட் பெயராகவும் வரும். தொழிற் பெயராகவும் வரும். பொருட் பெயராக வரும்பொழுது வாட்படையை உணர்த்தும். தொழிற் பெயராக வரும்பொழுது வாய்ச்சொல்லை உணர்த்தும். ''வாளாமை என்பது பேசாமை யாகும்'' என்பது திவாகரநிகண்டு பேசாமை என்ற எதிர்மறைப் பொருளில் 'வாளாமை' என்ற சொல் வருமேயானால், அதன் உடன்பாட்டுச் சொல் 'வாள்' என்றுதானே இருக்க வேண்டும்? எனவே 'என் வாய்வாள் மலைந்த வஞ்சி' என்பதற்கு, எனது 'வாய்ச்சொல் ஆகிய ஆணையை மேற்கொண்ட வஞ்சி' என்று சொற்களை மாற்றாம லேயே பொருள் கூறலாம்.

தொல்காப்பியர் 'கொடுத்தல் எய்திய கொடைமை யானும்' என்று கூறிய துறையை, வெண்பாமாலை 'கொடையின் வஞ்சி' என்று கூறுகிறது. அந்நூல் வஞ்சி என்னும் சொல்லை-குடைக் கும் வாளிற்கும் கொடுக்காமல் 'கூடார்ப் பிணிக்கும் குடைநிலை வாணிலை' என்று கூறிவிட்டுக் கொடைக்குமட்டும் அச் சொல் லைப் பெய்து கொடையின் வஞ்சி என ஓதிச் செல்கின்றதை ஆராய்ச்சியாளர் கருதவேண்டும்.

சிலப்பதிகாரத்தே அடிகளார் 'கோடைநிலைவஞ்சியும் கொற்ற வஞ்சியும்' என மோனை அழகுபடக் கூறிய பகுதியைக் கொடுத்தான் என்பதைக் குடுத்தான் என்று கூறுகிற ஏடெழுதுவோன் 'குடைநிலை வஞ்சி' எனப் பிழைபட எழுதிவிட, அப் பிழையானது அச் சொல்லிற்கும் குடைநாட்கோள் என்று உரை காணுமாறு செய்துவிட்டது. அப் பிழை அதனுடன் நிற்காமல், பின் வாணாட்கோள் வேண்டுமே? அஃது எங்கே உள்ளது? எனத் தேடத் தூண்டிற்று. அப்படித் தேடிய பொழுது அடுத்துக் கூறப் படாமல் ஒன்பதாவது அடியில் வந்திருந்த பொருட்பெயரல்லாத வாளை, வாட்படை என்று கருதச் செய்தது வஞ்சிக்குரிய பெயரெச்ச வினையாகக் கூறப்பட்டுள்ள 'மலைந்த' என்னும் பெயரெச்சத்தைப் பிரித்து 'மலைந்த வாள்' என்று மற்றொரு பெயருடன் கூட்டச் சொல்லிற்று. 'வாளை மலைந்த' என இரண்டாம் வேற்றுமை யிருக்க வேண்டிய இடத்தில் 'வாளுக்கு' என நான்காம் வேற்றுமையை விரிக்கச் சொல்லிற்று. 'சேனைக்குச் சூட்டி யாமும் வஞ்சி சூடுதும்' என்று முடிய வேண்டிய தன்வினையை 'என் வாளுக்கு வஞ்சி சூடுதும்' என முடிபறியாமல் முடிக்கச் செய்தது. இன்னும் எத்தனையோ குழறுபடைகள் நடக்குமாறு தூண்டி விட்டது அப் பிழை.

''திறனாய்வு செய்பவர்கள் முன்னே எடுத்துக்கொண்ட இலக்கியத்தின் சரியான மூலபாடத்தைப் பல சான்று கொண்டு ஆராய்ந்து துணிந்து கொள்ளவேண்டும்'' என்று மேலைநாட்டுத் திறனாய்வுப் பேரறிஞர்கள் கூறுவதை நாம் நன்றாகப் பின்பற்ற வேண்டும்.

மேலும் அறிஞர்கள் கருதுக.

இக் குடைநிலை, வாணிலை, வெண்பாமாலையுள் வஞ்சியிலும், அதன் எதிரதாகக் கருதப்படும் காஞ்சியிலும் பின் உழிஞையிலும் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் "குடையும் வாளும் நாள்கோ ளன்றி மடையமை ஏணிமிசை மயக்கமும்'' (புறத்திணையியல் - 11) என உழிஞையில் மட்டும் கூறப்பட்டிருக்கின்றன. வஞ்சியில் கூறப்படவில்லை. அடிகள் தொல்காப்பியத்தைப் பின்பற்றுபவராயின் வஞ்சியில் குடைநாட்கோள் வாணாட்கோள் கூற வேண்டுவதே யில்லை. வெண்பா மாலையில்,

''பெய்தாமம் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்
கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று''

''செற்றார்மேற் செலவமர்ந்து
கொற்றவாள் நாட்கொண்டன்று''

என வஞ்சியிலும்,

"அருமுனையான் அறைகூவினபின்
செருமுனைமேல் வாள்சென்றன்று"
"மூதுகுடி மறவர் முன்னுறச் சூழக்
கொதியழல் வேலோன் குடைசென் றன்று"

என வஞ்சியின் எதிராகிய காஞ்சியிலும்,

"செற்றடையார் மதில் கருதிக்
கொற்றவேந்தன் குடைநாட் கொண்டன்று"
"கலந்தடையார் மதில்கருதி
வலந்தருவாள் நாட்கொண்டன்று"

என உழிஞையிலும் கூறப்பட்டிருத்தலைக் காண்க. காஞ்சியில் மட்டும் நாட்கொள்ளுதல் என்று கூறப்படாமல் முறை மாற்றி வாட்செலவு குடைச் செலவு என்று கூறப்பட்டுள்ளது. மேற்காட்டிய கொளுக்களிலோ, உதாரண வெண்பாக்களிலோ போர்ப்பூவை - குடைக்கோ, வாளுக்கோ அணிந்ததாகக் கூறப்படவேயில்லை,

செங்குட்டுவன் வஞ்சிப் போருக்குச் செல்வதன்முன் தன் படைகளிடத்தே கொடைநிலைவஞ்சி, கொற்றவஞ்சி, மாராய வஞ்சி, வென்றோர் விளக்கம் உரைக்கும் வஞ்சி, பெருஞ்சோறு கொடுக்கும் வஞ்சி, கொற்றங் கருதிப் பாடப்படும் கொற்ற வள்ளை யென்னும் வஞ்சி என்னும் துறைச் செய்திகளை நிகழ்த்திப் பனந்தோட்டுடன் கூடிய வஞ்சியைச் சேனைகளுக்குச் சூட்டிப் பின் தானும் படைத் தலைவரும் வஞ்சிமாநகர்ப் புறத்தே அம் மாலையைச் சூடுதும் என்று கூறுகிறான்.

இவற்றை யெல்லாம் அறிஞர் உலகம் நடுநிலை உணர்வுடனிருந்து ஆராய்ந்து, உண்மைக் கூறுகளை உலகத்திற்கு உணர்த்த வேண்டும் என்பது என் வேண்டுகோளாகும்.


பெரும்பாலார் அவர்களாய் இருப்பதால் வருங்கேடு

இவ் இந்திய நாட்டில் அரசினை நடத்துதற்கு உதவியாய் நிற்பாரிற் பெரும்பாலார் ஆரிய முறையைத் தழுவிய பார்ப்பனராயும் அவர் சொல்வழி நடப்பவராயும் இருத்தலால், சைவசமய வளர்ச்சிக்குந் தமிழ் வளர்ச்சிக்குந் தமிழ் உணர்ந்தார் செலவிற்கும் அரசினரிடமிருந்து உதவி பெறுதல் இயலாததாயிருக்கின்றது.

—மறைமலையடிகளார்.

(மறைமலையடிகளார் அறிவுரைக் கோவை, பக். ௨00)

தமிழக அமைச்சரவை (30—6—1977)



மாண்பமை அமைச்சர்கள்

அமர்ந்திருப்போர் : (இடமிருந்து வலம்) (1) செ. அரங்கநாயகம், பி.ஏ. பி.டி, பி.எல்., (2) எஸ். இராமச்சந்திரன், பி.இ., (3) கே. நாராயணசாமி முதலியார், பி.ஏ , பி.எல்., (4) முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன், (5) மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி, (6) நாஞ்சில் மனோகரன், எம்.ஏ., (7) ஜி. ஆர். எட்மண்ட், பி.ஏ., பி.எல்., (8) ஆர். எம். வீரப்பன்

நிற்போர் : (1) கே. இராசா முகமது, பி.ஏ., பி.எல்., (2) பி. டி. சரசுவதி, எம்.ஏ., பி.எல்., (3) எஸ். இராகவானந்தம், (4) பெ. சௌந்தரபாண்டியன், (5) கா. காளிமுத்து, எம்.ஏ., (6) ஜி. குழந்தைவேலு (7) சி. பொன்னையன், பி.ஏ., பி.எல்.

தமிழ்நாட்டுப் புதிய அமைச்சரவை

தமிழ்நாடு 16 மாதகாலக் குடியரசுத் தலைவரின் ஆட்சிக்குப் பிறகு மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அமைச்சரவையின் ஆட்சிக்கு மீண்டுள்ளது. ஜூன் மாதம் நடைபெற்ற மாநில சட்டமன்றத் தேர்தலில் அறிஞர் அண்ணாவின் வழிவந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 130 இடங்களைக் கைப்பற்றி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. அக்கட்சியின் தலைவரான திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட அமைச்சரவை ஜுன் 30 அன்று தமிழக ஆட்சியை மேற்கொண்டுள்ளது. அவரைத் தவிர திரு நாஞ்சில். கி. மனோகரன் (நிதி), திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டம்), திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் (பொதுப்பணித்துறை), திரு எட்மண்ட் (உணவு), திரு. அரங்கநாயகம் (கல்வி), திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சி), திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தித்துறை) முதலான 13 அமைச்சர்களும் பதவி ஏற்றுள்ளனர். திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் அமைந்துள்ள புதிய அமைச்சரவை தமிழக மக்களின் நல்வாழ்க்கைக்குப் பாடுபட உறுதி பூண்டுள்ளது. புதிய அமைச்சர்களை உளமார வாழ்த்தி வரவேற்கிறோம்.

தமிழக முன்னாள் முதல்வர் திரு. கலைஞர். மு. கருணாநிதி அவர்களைத் தலைவராகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் 48 இடங்களைக் கைப்பற்றி முதன்மை எதிர்க்கட்சியாக அமைந்துள்ளது. திரு. கலைஞர் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மற்றும் முன்னாள் அமைச்சர்களான பேராசிரியர். க. அன்பழகன், திரு. சாதிக்பாட்சா, திரு. ப. உ. சண்முகம், சட்டப் பேரவைத் தலைவராக விருந்த புலவர். கா. கோவிந்தன் முதலியோரும் தேர்தலில் வெற்றிபெற்றுள்ளனர். அனைவருக்கும் நல்வாழ்த்துகள்.

தமிழக அரசியல் வரலாற்றில் 1920 முதல் நடந்துவரும் தேர்தல்களில் 1937 வரை நீதிக்கட்சியே வெற்றிபெற்று வந்தது. 1937 முதல் 1967 வரை காங்கிரசுக்கட்சி ஆட்சி செலுத்தியது. 1967 இல் அறிஞர் அண்ணா தலைமையில் திராவிடமுன்னேற்றக் கழகம் ஆளத்தொடங்கியது. அதுமுதல் தமிழகத்தில் தி. மு. க. வின் செல்வாக்கே வெவ்வேறு பெயரில் சிறப்புற்று விளங்குவதைக் காண்கிறோம். 1976 சனவரி இறுதியில் கலைஞரின் தலைமையிலிருந்த அமைச்சரவை மைய அரசினரால் கலைக்கப்பெற்றது. அத்துடன் தி. மு. க. வின் அரசியல் வாழ்வு முடிந்துவிட்டதாக எண்ணப்பெற்றது. ஆனால் அண்மையில் நடந்த தேர்தலில் தமிழ் மக்கள் 'தமிழ்ப் பேரொளி' அண்ணாவின் கொள்கை வழிநிற்கும் 178 பேரைத் தேர்ந்தெடுத்துள்ளமை அவர்தம் கொள்கைக்குத் தமிழ்மக்களிடையே உள்ள உறுதியான நம்பிக்கையைக் காட்டுகின்றது. இரு தலைவர்களின் இடையே தனிப்பட்டமுறையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகள் இருபெரும் கட்சிகளாக இன்று உருவாகியிருந்தாலும் அவ்விருவரின் உளநிலை மாறினால் இவ் வியக்கம் பேரியக்கமாகிவிடும் என்பதில் ஐயமில்லை. காலம் கனியவைக்கும்.

புதிய அமைச்சரவையில் 13 பேர் பட்டம் பெற்றவர்கள். 8 பேர் சட்டம் பயின்றோர். திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் பொறியியல் துறையில் ஆனர்சு பட்டம் பெற்றவர். கலைஞர் அமைச்சரவையில் அமைச்சரா யிருந்தவர். அமைச்சு அனுபவம் பெற்றவர் புதிய அமைச்சரவையில் இவர் ஒருவரே. தமிழ் மொழியில் எம். ஏ. பட்டம் பெற்றவர்கள். உள்ளாட்சி அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்களும் கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்களும் ஆவர். திரு. காளிமுத்து அவர்கள் இளைஞர்; தனித் தமிழார்வம் உடையவர். டாக்டர். அவ்வை. நடராசன் அவர்களின் மாணவர். இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தவர். இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் இன்று அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர். இவ்வளவு சிறப்புடன் அமைந்துள்ள அமைச்சரவை தமிழர் நலன் ஒன்றைமட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு உழைக்க வேண்டும். இதைமட்டுமே நோக்கமாகக்கொண்ட இருபெரும் கட்சிகள் தமிழகத்தில் ஆளுங் கட்சியாகவும் எதிர்க் கட்சியாகவும் அமைந்திருப்பது தமிழர் செய்த தவப் பயனே யாகும்.

தி. மு. கழகம் 17-9-1949இல் சென்னைப் பவழக்காரத் தெரு 7 ஆம் எண்ணுள்ள கட்டிடத்தில் அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப் பட்டது. 1967 முதல் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று நடத்தி வந்த தி. மு. கழகம், 1972 இல் அண்ணா தி. மு. க. என்னும் பிரிவினையைப் பெற்றது. இப்போது ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கும் அ. தி. மு. க. வும் எதிர்க்கட்சியாகிய தி. மு. கவும் அண்ணா அவர்களின் கொள்கையிலேயே தொடர்ந்து உறுதியோடு நின்று தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் நற்பணியாற்றுவார்களாக.

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தமிழுக்காக ஆற்றிவரும் தொண்டை நன்குணர்ந்தவர்கள். கழகம் வெளியிட்ட 'பழந்தமிழ் இலக்கிய இலக்கணப்பேழை'யை முதன் முதல் வாங்கி அதன் விற்பனையைத் தொடங்கி வைத்தவர். இதற்கு உறுதுணையாக இருந்தவர் கலைஞர் புத்தனேரி. ரா. சுப்பிரமணியம் அவர்கள் ஆவர். அவர் முதன் முதல் வாங்கியதன் நற்பேறாக இதுகாறும் 650 பேழைகள்வரை விற்கப் பெற்றுள்ளன. மேலும் 'தமிழர் சமய இலக்கியப்பேழை', 'பிற்கால இலக்கண இலக்கியப்பேழை', 'பள்ளிமாணவர் பல்வகை நூற்பேழை' ஆகிய மூன்று பேழைகள் உருவாக்கப் பெற்றுள்ளன. அவர் தம் இல்லத்தில் தமக்கென்று சிறந்த நூலகத்தை உருவாக்கி வைத்திருப்பவர். கலைஞர் ஆட்சியில் தமிழ்மொழி, பண்பாடு ஆகியவற்றைக் காப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பெற்ற முயற்சிகள் யாவும் புதிய முதல்வர் அவர்கள் ஆட்சியிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுத் தமிழ்ப் பண்பாடு காக்கப்பெறுமாக.

தமிழ் வளர்ச்சிக்குப் புதிய அரசின் திட்டங்கள்

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமசந்திரன் அவர்கள் தலைமையில் அமைந்துள்ள புதிய தமிழக அரசு தமிழ் வளர்ச்சிக்காகப் பல புதிய திட்டங்களை அறிவித்துள்ளது. அவற்றை முழுமனத்துடன் தமிழ் மக்கள் வரவேற்பர்.

தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் புதிய சட்டமன்றத் தொடரைத் தொடங்கிவைத்து நிகழ்த்திய உரையில் புதிய அமைச்சரவையின் தமிழ் வளர்ச்சித் திட்டங்களை வெளியிட்டுள்ளார்.

"எல்லாவகையிலும் தமிழை வளர்க்கச் சிறப்பு நாட்டம் செலுத்துவோம்.

பிற மாநிலங்களில் தமிழ் பயிலுவதற்கு ஊக்க உதவி அளிக்கப்படும்.

தமிழ் இலக்கியம், கலை, வரலாறு, தொல்பொருள் முதலியவற்றைப் பாதுகாப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் அவசியமான நிதி ஒதுக்கப்படும்.

பிற மொழிகளில் வெளிவந்துள்ள பண்டைய இலக்கியங்களையும் பல்வேறு துறைகளில் வந்துள்ள தற்கால நூல்களையும் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு அரசு நிதி உதவி செய்யும்.

அரசு இத்தகைய திட்டங்களை வகுத்துள்ளமைக்காகத் தமிழுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. இதனை விரைவில் செயல்படுத்தல் வேண்டும்.

தமிழ் மொழியைப் பிற மாநிலங்களில் பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்க முயற்சி மேற்கொள்ளப் பெறவேண்டும். கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிற்றுவிக்கத் திட்டம் நிறைவேறியதாகத் தெரியவில்லை. இன்னும் பிற பல்கலைக் கழகங்களிலும் தமிழ்த் துறைகள் தொடங்க வேண்டும்.

தமிழ் இலக்கியம், கலை, வரலாற்று ஆராய்ச்சிக்கு அரசு உதவ வந்துள்ளது மகிழ்தற்குரியது. தமிழ் ஆராய்ச்சியை வளர்க்கவும் மேனாட்டார்க்கும் பிறமொழியாளர்கட்கும் தமிழ் பயிற்றுவிக்கவும் அறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வளர்ச்சியில் அரசு போதிய கவனம் செலுத்துவதுடன் அதற்கெனத் தனிக் கட்டிடம் பெரிய அளவில் அமைக்கவும் பல அரிய நூல்களை வெளியிடவும் போதிய பொருள் வசதியை அளிக்க வேண்டும்.

பிறமொழி இலக்கியங்களைத் தமிழக அரசு தமிழில் மொழி பெயர்க்கத் திட்டமிட்டுள்ளதை வரவேற்கிறோம். அதே சமயம் தமிழில் சிறந்த இலக்கியம் மற்றும் பிற துறை நூல்களை ஆங்கிலத்தில் வெளியிடப் போதிய பொருள் வசதி செய்து தரவேண்டும். ஆங்கிலத்தின் வாயிலாகத்தான் இந்தியாவின் பிற மொழியினர்க்கும் மேனாட்டார்க்கும் நம் பெருஞ் செல்வத்தை உணர்த்த முடியும்.


தமிழில் அழிந்துபோகும் பண்டைய இலக்கிய நூல்களை வெளியிடவும் அரசு பொருளுதவி செய்ய வேண்டும். நல்ல தரமான இலக்கிய நூல்களை வெளியிடும் நிறுவனங்களுக்கு அரசு நன்கு உதவ வேண்டும்.

வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு அரசு நிதி உதவி செய்ய முன் வந்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும். சிறந்த தமிழறிஞர் ஒருவரை அரசு தமிழக மேலவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறு ஒல்லும் வகையெல்லாம் தமிழின் வளர்ச்சிக்குப் புதிய அரசு உறுதுணையாக நிற்க வேண்டும்.

இந்து நாளிதழின் தலைமைப் பொறுப்பாசிரியர் திரு. ஜி. நரசிம்மன் மறைவு

தமிழகத்தின் சிறந்த ஆங்கில நாளிதழான 'இந்து'வின் தலைமைப் பொறுப்பாசிரியரான திரு. ஜி. நரசிம்மன் 3—7—77 காலை 11-30க்கு மாரடைப்பு நோயால் மறைவுற்றார். 'இந்து' நாளிதழை உலக மக்கள் அனைவரும் வியக்கும் வண்ணம் சிறந்த முறையில் நடத்தி வருவது கஸ்தூரி ரங்க ஐயங்காரின் குடும்பமாகும். 1878 இல் இளைஞர் அறுவரால் வார இதழாகத் தொடங்கப் பெற்ற 'இந்து'வை 1905 இல் கஸ்தூரிரங்க ஐயங்கார் விலைக்கு வாங்கினார். அதுநாள் முதல் இன்னாள் வரை 72 ஆண்டுகளாக அவர் மக்களும் பேரர்களுமே 'இந்து'வைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

கஸ்தூரி ரங்க ஐயங்காரின் மகன் (கோபாலன்)வழிப் பெயரரான திரு. ஜி. நரசிம்மன் வரலாற்றுத் துறையில் பி.ஏ. ஆனர்சு பட்டம் பெற்றவுடன் 'இந்து'வில் பணியாற்றத் தொடங்கினார். அதில் பல பதவிகளை வகித்தபின் 1934 முதல் 1959 வரை 'இந்து'வைத் தலைமைப் பொறுப்பாசிரியராக இருந்து நடத்தி வந்த அவர்தம் பெரிய தந்தையார் திரு. கஸ்தூரி சினிவாசன் மறைவுற்றதால் 1959 இல் அவர் வகித்து வந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டு இது வரை அந்நாளிதழின் முன்னேற்றத்திற்காகப் பல வழிகளிலும் பாடுபட்டார். இன்று 'இந்து' தென்குமரி வரை அதன் சொந்த விமானத்திலேயே நாள்தோறும் பறந்து செல்கிறது. கோவை, பெங்களூர், ஐதராபாத்—மூன்றிடங்களிலிருந்தும் மறுபடிவப் பதிப்புகள் வெளியாகின்றன. இவை அனைத்துக்கும் காரணம் திரு. நரசிம்மன் அவர்கள்தாம்.



அவர் 'இந்து'வை நடத்தி வந்ததோடு மட்டுமன்றிச் செய்தித்துறை தொடர்பான பல நிறுவனங்களில் சில முக்கிய பொறுப்புகளை ஏற்றிருந்தார். 'இந்தியன் அண்டு ஈஸ்டர்ன் நியூஸ்பேப்பர் சொசைட்டி'யின் தலைவராக 1956—57 லும் 'ஆடிட் பீரோ ஆப் சர்குலேசன்' தலைவராக 1958-59 லும் இன்டர்நேஷனல் பிரஸ் இன்ஸ்டிடியூட்டின் இந்தியப் பகுதிக்குத் தலைவராக 1959 இலும், பிரஸ் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா'வின் தலைவராக 1968 இல் அது தொடங்கியதிலிருந்தும் அவர் புகழுடன் திகழ்ந்தார்.

இவ்வாறு பல பொறுப்புகளை அவர் வகித்து வந்தபோதும் அவர் பழகுவதற்கினியர், இன்சொல்லர். இசைத் துறையிலும் பள்ளிக் கல்வித் துறையிலும் அவருக்குப் பேரீடுபாடுண்டு. திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளி, மயிலை பி. எஸ் உயர்நிலைப் பள்ளிகளின் நிர்வாகக் குழுக்களில் பல்லாண்டுகள் உறுப்பினராக இருந்து வந்தனர். நங்கநல்லூரிலுள்ள வெங்கடேசுவரா இந்து காலனி பள்ளியின் தலைவராக மறையும் வரை சிறக்கப் பணி புரிந்தார்.

இத்தகைய அரும்பண்புகள் நிறைந்தவர் தம் 61ஆம் அகவையில் மறைவுற்றது இதழ்கள் உலகிற்கும் கல்வி உலகிற்கும் பேரிழப்பாகும். அவருடைய மறைவு குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர் ஜட்டி, பிரதமர் மொரார்ஜி தேசாய், இந்திரா காந்தி, தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி, தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் முதலிய பெருமக்கள் தம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளனர். அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் துணைவியார்க்கும் மக்களுக்கும் 'இந்து' இதழின் ஊழியர்கட்கும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

முதுபெரும் புலவர் நீ கந்தசாமிப் பிள்ளை மறைவுக்கு இரங்கல்

சென்னைத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் 34 ஆம் ஆண்டு இலவசத் தமிழ் வகுப்புகள் தொடக்கவிழா 22—6—77 இல் புலவர் திரு. பூ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் கூடியது. அப்போது முது பெரும் புலவரும் பல்கலைச் செல்வருமாகிய, தஞ்சை நீ கந்தசாமிப் பிள்ளை அவர்கள் மறைவு குறித்துச் சிறுவை மோகன சுந்தரம் அவர்கள், இரங்கல் தீர்மானம் ஒன்றினைக் கொணர்ந்து, மறைந்த புலவரவர்களின் மாண்புகளை எடுத்துரைத்தார். பின்னர் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்த இதழில் வரலாற்றுக் குறிப்பு வெளிவரும்.

கழக நூற்கட்டடத்துறை மேற்பார்வையாளர் திரு. மாணிக்கசாமி மறைவு

கழகநூற் கட்டட மேலாளராக, ஏறக்குறைய 40 ஆண்டுகட்கு மேலாகப் பணியாற்றி வந்த திரு. மாணிக்கசாமி கடந்த 17—6—77 இல் காலமானார் என்ற செய்தியினை மிக்க வருத்தத்துடன் அறிவிக்கிறோம். திரு. மாணிக்கசாமி கழக நூல்களைச் செவ்வனே கட்டடம் செய்வதில் வல்லவர். அவர்தம் கட்டடப் பணியினால்தான் கழக நூல்கள் அனைத்தும் கவர்ச்சியாகவும் உறுதியாகவும் திகழ்ந்தன. அதிலும் பரிசளித்தற்குரிய வகையில் திருக்குறள், திருவாசகம் முதலிய நூல்களை 'ரெக்சைன் கட்டடம்' செய்து தந்த அவர் திறம் கண்டு தமிழன்பர்கள் மட்டுமன்றி அனைத்திந்திய அரசும் பாராட்டியுள்ளது.

27—2—56 இல், நடைபெற்ற அனைத்திந்திய அச்சகத்தார் மாநாட்டில் கழக வெளியீடுகளான திருக்குறள், திருவாசக மூலம் ஆகியவற்றின் கட்டடச் சிறப்பினைப் பாராட்டி நற்சான்றிதழும், வெள்ளிக் கிண்ணம் ஒன்றும் (cup) வழங்கப்பட்டமை இங்கு நினைவு கூரத்தக்கது. திருக்குறள் பரிமேலழகர் உரையின் ரெக்சைன் கட்டட அமைப்பைப் பாராட்டி அந்நாள் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர். எஸ். இராதாகிருட்டிணன் அவர்கள் பரிசு வழங்கினர். அதனை 8—11—56 இல் கழகப் பொது மேலாளர் திரு. இரா. கலியாணசுந்தரம் அவர்கள் புது தில்லி சென்று நேரிற் பெற்று வந்த செய்தியும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இங்ஙனம் கழக நூற் கட்டடத்திற்குப் பெருமை தேடித் தந்த திரு மாணிக்கசாமியின் மறைவு கழக நூற் கட்டடப் பணித்துறைக்கு ஒரு பேரிழப்பேயாகும். மறைந்த அன்னாரின் குடும்பத்தார்க்குக் கழகத்தின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

செய்திகளும் குறிப்புகளும்

ஜம்மு அருகில் 'அரப்பா' நாகரிகச் சான்றுகள்

அரப்பா நாகரிகம் செழித்தோங்கியிருந்த பல இடங்களை இந்தியத் தொல்பொருள் துறை அகழ்ந்து ஆராய்ந்து வருகின்றது. ஜம்மு நகர்க்கருகில் செனுப் நதியின் கரையோரமாக அக்னூர் என்னுமிடத்தில் அண்மையில் அகழ்வாய்வு நடத்தியபோது அரப்பா நாகரிகம் அதுவரை பரவியிருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. குஷன் காலத்துப் பொருள்களான பானை ஓடுகள், அணிமணிகள், குத்துவாள்கள் முதலியவை அங்குக் கிடைத்துள்ளன. அங்கு அரப்பா நாகரிகத்திற்கு முந்திய நாகரிகம், அரப்பா நாகரிகம், குஷன் நாகரிகம் ஆகிய மூன்று நாகரிகங்களும் பரவியிருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஆங்கிலக் கவிஞர் வோட்ஸ் வொர்த்தின் கடிதங்களின் மதிப்பு 35 ஆயிரம் பவுன்!

ஆங்கில நாட்டுக் கவிஞரான 'வோட்ஸ் வொர்த்'க்கும் அவர்தம் துணைவியார் மேரி அம்மையாருக்குமிடையே நடமாடிய காதற் கடிதங்களுக்கு இப்போது பெருமதிப்பு ஏற்பட்டுள்ளது. 'டவ் காட்டேஜ் டிரஸ்டு' என்பது வோட்ஸ் வொர்த் காட்சிச் சாலையை நடத்தும் ஒரு குழுவாகும். அக் குழுவினரைத் தாம் இப்போது வோட்ஸ் வொர்த்தின் காதற் கடிதங்களை, அவற்றின் இலக்கியச் சிறப்பினை நோக்கி ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளனர். ஜொனதன் வோட்ஸ் வொர்த் என்பவர் இக்குழுவின் செயலாளராக இருக்கிறார். இவர் கவிஞர் வோட்ஸ் வொர்த் மரபில் தோன்றியவராவார். 35 கடிதங்களைக் கொண்ட இக் கைப்படிகள் ஏலம்விடப் பட்டபோது, அஃதாவது 7—7—77 இல், புத்தக வணிகர் ஒருவர் அவற்றை 35 ஆயிரம் பவுன் (5.25 லட்ச ரூபாய்) கொடுத்துப் பெற்றுக் கொண்டாராம்.

நடுவண் அரசு காவல்துறைத் தேர்வில் வெற்றி பெற்ற செல்வி சீதேவி

அண்மையில் இந்திய காவல் துறை, படைத்துறை ஆகியவற்றிற்காக நடத்தப்பட்ட தேர்வில், சேலம் தாயமேரி உயர்நிலைப் பள்ளியில் பயின்றவரும், சேலம் சாரதா கல்லூரியில் பயின்று பி. எசி. பட்டம் பெற்றவருமான செல்வி எம். எஸ். சிதேவி என்பவர் தனிச் சிறப்புடன் முதன்மையாகத் தேர்வு பெற்றுள்ளார். இவர் 1969 இல் சேலம் மாவட்ட உடற்பயிற்சிப் பள்ளியில் பயின்று தேர்வு பெற்றார். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில், இவர்தம் தமையனர் எம். எஸ். சீனிவாசன் என்பவர் ஆட்சிப் பொறுப்பாளராகப் பணியாற்றி வருகிறார்.

வாஷிங்டனில் ஒரு வேதாந்த காட்சிச் சாலை

அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் நகரில் வேதாந்தக் கருத்துக்களைப் பரப்பப் பெருஞ் செலவில் பெரியதொரு காட்சிச்சாலை அமைக்கப் பெருஞ் செல்வரான அமெரிக்கர் ஒருவர் திட்டமிட்டுள்ளனராம். பம்பாயிலுள்ள கிருட்டின பத்தி நிலையமான சர்வதேச சங்கம் ஒன்றின் தலைவரான ஆச்சாரிய பிரபுபாதர் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் "இந்தக் காட்சிச்சாலை அமைக்கும் பணியில் நான் என் வாழ்நாளில் தேடிய செல்வத்தில் பன்னூறாயிரக் கணக்கான டாலர்களைச் செலவிட

விரும்புகின்றேன்'' என்று குறிப்பிட்டுள்ளார். அவர் அமைக்கவிருக்கும் அந்த மாளிகையில் பாகவதம், பகவத்கீதை ஆகியன பற்றிய விளக்கங்கள் இடம் பெறும் என்றும் கூறப்படுகிறது.

வண்ணச் சரபம் அருள்மிகு திருவாமாத்தூர் தண்டபாணி அடிகள் திருக்கோயில் குடமுழுக்கு விழா

வண்ணச் சரபம் அருள்மிகு தண்டபாணி அடிகள் திருக்கோயில் குடமுழுக்கு விழாவும் 79ஆவது குருபூசை விழாவும் 3—7—77 ஞாயிற்றுக்கிழமை காலை, மயிலம் பொம்மபுர ஆதீனம் சிவத்திரு. சிவ ஞானபாலய சுவாமிகள், தவத்திரு சுந்தர சுவாமிகள், பேரூர் சாந்த லிங்க இராமசாமியடிகள் ஆகியோர் முன்னிலையில் சிறப்புற நடைபெற்றது.

ஆலமரப்பிள்ளையார் — 9 ஆம் ஆண்டு விழா



1968 ஆம் ஆண்டு குலைத்திங்கள், 14 ஆம் நாளன்று சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள இட்டலிங்கேசுரர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு நிகழ்ந்தபோது அக்கோயிலுக்கு அண்மையில் (இராசாசி மண்டபத்திற்கு மேற்புறம்) உள்ள ஓர் ஆலமரத்தில் சிறியதாக ஒரு பிள்ளையார் திருவடிவம் தோற்றமளித்தது.

இத் திருவடிவம் நாளடைவில் வளர்ந்து வந்தது. ஓராண்டுக்குமேல் ஒன்றரையாண்டுக்குள் வலக்கண்ணும், அதன்பின் 4 மாதங்களுக்குப்பின் இடக்கண்ணும், பின்னர்க் கொழுக்கட்டையும் தோன்றின.

திருமுடி கவித்த தலையோடும், வலப்புறக் காதோடும், துதிக்கையில் ஒற்றைக் கொம்போடும், மழு (அங்குசம்) கயிறு (பாசம்), கொழுக்கட்டை, ஓடிந்தகொம்பு ஆகியவற்றைத் தனித்தனிக்கொண்டுள்ள நான்கு திருக்கைகளோடும் பெருவயிற்றோடும், பெருச்சாளி யூர்தியின் மேல் அமர்ந்திருக்கும் கோலத்தில் இத் திருவடிவம் தோற்றமளிக்கிறது. இத் திருவுருவம் மேலும் வளர்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

பாலக்காட்டைச் சேர்ந்த பத்மநாபன் என்பவர் தொடக்கமுதல் இப் பிள்ளையாருக்கு வழிபாடாற்றி வருகின்றார். 45 அகவையுள்ள இவர் கடந்த ஐந்தாண்டுக்காலமாக இவ்வாலமரத்தையே தம் இருப்பிடமாகக்

கொண்டு தங்கியிருந்து வழிபாடாற்றி வருகின்றார். ஆலமரத்தை உட்படுத்திச் சிற்றுக்கொட்டகையாகக் கட்டப்பட்டிருக்கும் இக் கோயிலில் பலப்பல கடவுட் படங்களும் முருகன், அறுபத்து மூவர் திருவுருவப் படமும், ஐயப்பன் ஐம்பொன் திருப்படிவங்களும் உள்ளன. பின்புறம் உள்ள வேப்பமரத்தடியில் நாகர் வடிவங்கள் நிறுத்தப்பெற்றிருக்கின்றன. இரு காளைமாடுகளும், பூச் செடிகளும் திரு. பத்மநாபன் அவர்களால் வளர்க்கப் பெறுகின்றன. சமய நூல்கள் மட்டும் அங்கே விற்கப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணரும் சொற்பிறப்பியல் அகர முதலிக்குரிய அலுவலகமும்

கன்னிமாரா நூலகப் பக்கமுள்ள குதிரை கட்டப்பெற்ற லாயத்தில் சிமை ஓடு வேயப்பட்டதும் மழைபெய்யும்போது ஒழுக்குடையதுமான ஓர் அறையில் தமிழ் மொழியின் தனிச்சிறப்பினை விளக்குவதற்கு ஏற்படுத்தியிருக்கும் துறை புதிய அரசு பார்வைக்குக் கொண்டுவருவது தமிழ் அறிஞர் பெருமக்களின் கடமையாகும்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் ௫௪௪ ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழக ஆட்சியாளர் உயர்திரு. வ. சுப்பையா பிள்ளை மே, ஜுன் நன்கொடை	ரூ 200	00
கழக மேலாளர் உயர்திரு. ஆ. சுப்பையா பிள்ளை மே, ஜுன் நன்கொடை	10	00
திரு. S. சண்முகசுந்தரம் பிள்ளை வல்லங்கி, நெம்மரா, பாலக்காடு மா. வ.	11	00
திரு. K. ராமச்சந்திரன் பிள்ளை, சென்னை. (மகள் திருமணத்தை முன்னிட்டு)	5	00

மதிப்புரை

தமிழக நாட்டுப் பாடல்கள்

[ஆசிரியர் : மு. வை. அரவிந்தன், எம். ஒ. எல்., விற்பனை உரிமை: பாரி நிலையம். விலை : ரூ 9.00]

ஏட்டில் இடம்பெறுவிடினும் கற்றார் நெஞ்சங்களில் இடம் பெற்று இந்நாளில் இலக்கியத் திறனாய்வுக்கு உரியனவாய் உருப்பெற்று வந்துள்ள நாட்டுப்பாடல் நூல்களுள் இதுவும் ஒன்று. திரு. அரவிந்தன் அவர்கள் 16 தலைப்புகளில் தமிழக நாட்டுப் பாடல்கள் பலவற்றைத் தொகுத்து, அவற்றுக்கு விளக்கங்களும் எழுதிச் செல்லும் பாங்கு பெரிதும் பாராட்டற்குரியது. நாட்டுப் பாடல்களின் சுவை, இவர் எடுத்துக் காட்டும் முறையால் படிப்போர்க்குப் புதுச்சுவை அளிக்கின்றது. இலக்கியத் திறனாய்வாளர்க்கும், கல்லூரி மாணவர்கட்கும் பெரிதும் பயன்படக் கூடிய நூல். பதிப்புமுறை பாராட்டத் தக்கது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : வ. சுப்பையா.

பிரசுரகர்த்தரின் புதிய வெளியீடுகள்

அகிலன் சிறுகதைகள்-ஒரு திறனாய்வு —டாக்டர் சு. வேங்கடராமன்	8	00
சிலப்பதிகார யாத்திரை—ம. பொ. சிவஞானம்	2	00
கல்கி அகிலன் படைப்புக்கலை —டாக்டர் த. வே. வீராசாமி	4	00
லெனின் கதைகள்—அ. லெ. நடராசன்	2	75
சேரமான் காதலி—கண்ணதாசன்	20	00
பரிசில் வாழ்க்கை—தமிழண்ணல்	4	00
ஆணவ திருவிளையாடல்—க. பெருமாள்	8	00
அபரஞ்சி மகள்—இருகூரான்	5	00
மேடம் சரளா—சகுந்தலா மெய்யப்பன்	10	00
தேசியக் கவியின் விடுதலை முழக்கம்-மார. தமிழ்ச்செல்வன்	3	00
ஒரு தாயின் இதயம் ,,	5	00
சரணாலயம்—முகிலன்	3	00
முத்திவழிப் பாமாலை—எ. ஆ. கிருஷ்ணபிள்ளை	1	50
குடும்ப வழிகாட்டி—சரோஜா குஞ்சிதபாதம்	5	00
திறவுகோல்— ,,	3	50
தெய்வவழிச் சிந்தனைகள்—இரத்தின சண்முகனார்	8	00
தமிழக நாட்டுப் பாடல்கள் —மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல்.	9	00

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

(மாதப் பத்திரிகை)

தமிழகத்தின் சமய வளர்ச்சிக்காக ஸ்ரீராமகிருட்டிண மிஷினின் சார்பாகத் தமிழில் வெளிவருகிறது.

மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள், நடைமுறை வாழ்க்கையில் மதத்தைக் கைக்கொள்ள வேண்டிய வழி முறைகள், சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, வேதாந்தம், பக்தி, சமய சமரசம், உபநிஷத உண்மைகள், சைவம், வைணவம், ஞானக் கதைகள் ஆகிய கருத்துகளைக் கொண்டது.

தற்கால நவீன மக்களின் மனப்போக்குக்கு ஏற்ற வகையில், பகவான் ஸ்ரீ ராமகிருட்டிணரும் சுவாமி விவேகானந்தரும் காட்டிய வழியில் சிறந்த மனிதர்களை உருவாக்குவது ஒன்றே இப் பத்திரிகையின் இலட்சியம்.

ஹிந்து சமயத்தை உள்ளபடியே புரிந்துகொள்ள விரும்புபவர்களுக்கும், பின்பற்ற விரும்புபவர்களுக்கும் மிகச் சிறந்த முறையில் துணை புரியும் தமிழ்ப் பத்திரிகை இதுவே.

இப்பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள் கருத்தாழம் கொண்டவை. ஸ்ரீராமகிருட்டிண மடங்களைச் சேர்ந்த சன்னியாசிகளும் மற்றும் பல அறிஞர்களும் எழுதும் சிந்தனைக்கு விருந்தாக அமையும் கட்டுரைகளைக் கொண்டது.

உங்கள் உள்ளம் உயர நீங்கள் அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

சந்தா விவரம் :

வருட சந்தா : ரூ. 7-00 ஆயுள் சந்தா : ரூ. 100

தனிப்பிரதி : 70 காசு

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மைலாப்பூர் ::: சென்னை-600004.

பதிவு எண் : M. 4899

கழகப் புதிய வெளியீடுகள்

பரிசு—புலவர் இரா. இளங்குமரன்

இது களவியற் காரிகை என்னும் அகத்துறை இலக்கியத்தைப் பின்னணியாகக்கொண்டு எழுதப்பட்ட ஒரு புது இலக்கியமாகும். சுவையும் பயனுமுள்ள நூல். ரூ. 2 00

நீதிபோத வெண்பா

—குறிப்புரை : புலவர் இரா. இளங்குமரன்

இராமநாதபுரம் அரசர் முத்துராமலிங்க சேதுபதியவர்கள், பல்வேறு நீதிகளை உணர்த்த நூறு வெண்பாக்களால் எழுதிய நூலே இந்த நீதிபோத வெண்பா என்பது. இனிய எளிய செய்யுள் நடையில் அமைந்துள்ள இந்நூலுக்குச் சிறந்த குறிப்புரையும் சேர்க்கப்பட்டுள்ளது. பொது நூலகங்கள் அனைத்திலும் இருக்கவேண்டிய சிறந்த நீதி நூல். ரூ. 2 50

சிவஞானபோதம்

மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதம் எல்லாரும் எளிதில் படித்துப் புரிந்துகொள்ளும் வகையில் நூலாசிரியர் வரலாறு, நூலின் மாண்பு, 'சிவஞானபோதம் என்றால் என்ன?' என்பதற்கு அருட்டிரு அழகரடிகளின் விளக்கம் ஆகியவற்றுடன் அழகிய கையடக்கப் பதிப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. சைவ மெய்யன்பர்கள் இல்லங்களிலும் பொது நூலகங்களிலும் இருக்கவேண்டிய நூல். நெட்டுருப் பண்ணுவதற்கேற்ற பதிப்பு ரூ. 1 00

ஊமைக் குயில்

— டாக்டர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பி.எச்.டி.,

இஃது இலக்கியத்தையும் வரலாற்றையும் அடிப்படையாகக் கொண்டு கற்பனை கலந்து புனையப்பட்டதோர் இனிய இலக்கிய நாடகம். நக்கண்ணை என்னும் நங்கை காதலில் தோல்வி கண்டு ஊமைக் குயிலாக வாழ்ந்து தன்னுடைய காதலனைக் காப்பாற்றத் தன்னுயிரையே கொடுத்துப் புகழ் பெறுகின்றாள். இது கதையின் சாரம். 'மனோன்மணீயம்' 'அனிச்ச அடி' போன்ற இலக்கிய நாடகங்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க ஓர் இனிய நாடகம். ரூ 10 00

பொருநை வளம்

— பேராசிரியர், கோ. வே. பெருமாள், எம்.ஏ., பி டி.

ஆறுகளால் நாடுகள் எங்ஙனம் சிறப்புறுகின்றன என்பதை அறிவிக்கும் வகையில் முன்னர்க் 'காவிரிவளம்' என்னும் நூல் வெளிவந்துள்ளது. இப்போது வெளிவந்திருக்கும் இப் 'பொருநை வளம்' ஏறக்குறையத் திருநெல்வேலி மாவட்டத்தின் வரலாறு கூறும் நூல்போல் திகழ்கிறது. வரலாற்றாசிரியர்கட்குப் பயன்படத்தக்க அரிய நூல். விளக்கப்படமும் சேர்க்கப்பெற்ற அழகிய பதிப்பு ரூ. 6 75

அப்பர் அச்சகம், சென்னை-1.